வார இதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM තේසියම්


WELLA HAIR DRESSING

WELLA

வெலா சலூன்

Ladies & Gents

FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: [illegible] | இதழ்: 13 | வள்ளுவர் ஆண்டு 2054 | 06.12.2023 – 12.12.2023 | ஊக்குவிப்பு: 80/=



# போலித் துவாரகாவும் பின்னுள்ள மர்மங்களும்!

பக்கம் 10




# வடக்கில் தீவிரமாகும் எய்ட்ஸ்! மருத்துவர்கள் அபாய எச்சரிக்கை!!

வடக்கு முழுவதும் 90 பேர், யாழில் மட்டும் 65 பேர் அடையாளம்.

பக்கம் 06





## கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வு நிறுத்தம்!

மீண்டும் மார்ச் மாதம் ஆரம்பமாகும். இதுவரை 39 எலும்புக்கூடுகள் மீட்பு!

பக்கம் 11

## இலங்கை இராணுவ அதிகாரிகளை தடை செய்ய பிரித்தானியாவில் தொடரும் முயற்சி.

டேவிட் சிம்மண்ட்ஸ் எம்.பி உடனான இராஜதந்திர சந்திப்பு!

பக்கம் 11



## மாவீரர் நாள் 2023

விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட நினைவு நாட்களின் போது நீதிமன்றங்களின் முடிவுகளே பெருமளவுக்கு நினைவு கூர்தலைத் தீர்மானிக்கும் ஒரு நிலைமைதான் கடந்த 15 ஆண்டுகளாகக் காணப்படுகின்றது.

பக்கம் 04

## மீற்றர் வட்டி மாபியாக்கள் மீது உடனடி நடவடிக்கை. மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு!



யாழ்ப்பாண மாவட்டத்தில் மீற்றர் வட்டிக்குப் பணம் கொடுப்பது, வட்டி கோரி மிரட்டுவது போன்ற சம்பவங்கள் தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் வழங்கவேண்டும் என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வாறான சம்பவங்கள் அதிகம் நடைபெறுகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. வட்டிக்காக சொத்துகளை மிரட்டிப் பறிக்கும் சம்பவங்களும் நடக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் தகவல்களை வழங்கினால் துரிதகதியில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். பொதுமக்கள் எவ்வித அச்சமும் இன்றி தகவல்களை யாழ்ப்பாணத்தில் உள்ள எனது அலுவலகத்திலோ அல்லது எனக்கோ தெரிவிக்க முடியும் என்றும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

## பயங்கரவாதத் தடைச் சட்டம் அமெரிக்கா, ஐ.நா. அதிருப்தி!

இலங்கையின் வடக்கு - கிழக்கில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி அண்மையில் நடந்த கைதுகள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று ஐக்கியநாடுகள் மனித உரிமை அலுவலகம், அமெரிக்கா ஆகியன தெரிவித்துள்ளன. இது மனித உரிமைகளை மீறும் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்திவைப்பது தொடர்பான அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கு மாறானது எனவும் ஐ.நா. தெரிவித்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது கவலையளிக்கின்றது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

## துவாரகா பெயரில் வெளிவந்த காணொளியை நிராகரிக்கிறோம்!



### நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

தமிழீழத் தேசிய மாவீரர் நாளில், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்களது புதல்வி துவாரகாவின் பெயரில் வெளிவந்த காணொளியினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் முற்றாக நிராகரிக்கின்றது.

கிடைக்கப்பெற்ற உறுதியான தகவல்கள், தரவுகளின் அடிப்படையிலும், எமது அவதானங்களின் வழி நின்றும் இம் முடிவினை நாம் எடுத்துள்ளோம்.

தமிழீழத் தேசியத் தலைவரையும், அவரது

பக்கம் 06

## முள்ளிவாய்க்கால் பேரழிவை தடுத்திருந்தால் பூகோள அரசியல் போட்டி கூர்மை அடைந்திருக்காது!

### வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்



இந்தியா, சீனா போன்ற நாடுகளின் பூகோள அரசியல் அதிகாரப் போட்டியினால் இலங்கை எதிர்காலத்தில் போர்க்களமாக மாறும் அபாயம் உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய ஊடகமான First Post ற்கு செவ்வி வழங்கியுள்ளார்.

இலங்கைத்தீவில் சிங்கள பேரினவாத ஆட்சியாளரின் அதிகார பதவி வெறியும் ஊழலும் நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு மாற்றியது மாத்திரமல்ல பூகோள நாடுகளின் அரசியல் சதுரங்கமாகவும் மாறியுள்ளது நாடு பற்றியதும் அதன் நிலையான அபிவிருத்தி பற்றியதும் நிலையான கொள்கைகளை வகுக்காமல் ஆட்சிக்கு வந்ததும் தமக்கான அதிகாரங்களை அளவுக்கு அதிகமாக பெற்று அதிகார துஸ்பிரயோகங்களை செய்து அவற்றில் இருந்து தப்பிக் கொள்ள தமக்கு விரும்பிய வெளிநாடுகளுக்கு நாட்டின் முதன்மையான பகுதிகளை விற்று மறைமுக காலணித்துவத்தை வலுப் பெறச் செய்து விட்டு பொறுப்பற்ற வகையில் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருந்து வேதாந்தம் ஓதுகின்றனர் இதற்கு தற்போதைய

பக்கம் 06

தமிழ் பேசும் மக்களின் தேசியப் பத்திரிகை

# சுயநிர்ணயம் யாருக்கு..?

**சுயநிர்ணயம் என்பது தேசிய இனமொன்று சுயமாக, சுதந்திரமாக தமது அரசியல் ஏற்பாட்டை தீர்மானிக்கும் உரிமையைக் குறிக்கின்றது.**

வெளி வற்புறுத்தல்கள் இன்றி ஒருவர் தனது செயல்பாடுகளை தானே தெரிவுசெய்து கொள்வதற்கும் எவ்வித தலையீடுகளுமின்றி ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்கள் தமது சொந்த அரசியல் நிலையை முடிவு செய்து கொள்வதற்கும் அல்லது தமது தற்போதைய நாட்டில் இருந்து விடுதலை அடைவதற்கு அவர்களுக்கு உள்ள சுதந்திரமே தன்னாட்சி உரிமை அல்லது சுயநிர்ணயம் எனக்கொள்ள முடியும்.

பொதுவாக ஒரு அரசின் கீழுள்ள தேசிய இனங்கள் அவ் அரசின் கீழ் தொடர்ந்து வாழ்வதா அல்லது பிரிந்து சென்று தமக்கான உரிமையினை நிலைநிறுத்திக் கொண்டு தமக்கான அரசியலை தீர்மானிக்கவும் இன சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் இனங்களுக்கிடையே தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்தவும் கூடிய பரிபூரணமான செயற்பாடுகளே சுயநிர்ணய உரிமைகளின் அடக்கமாக கொள்ள முடியும்.

பொதுவாக ஒரு மக்கள் கூட்டத்தை தாம் வாழும் நிலப்பரப்பிற்குள் தேசிய இனமாக அங்கிகரிக்க இனம் நிலம், மொழி, பொதுப்பண்பாடு சுய பொருளாதாரம் என ஐந்து அம்சங்களை உள்ளடக்கியதாக வரையறுத்துக் கொள்ள முடியும்.

இலங்கையை பொறுத்தவரையில் கடந்த 4 தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தமானது ஒரு தேசிய இனத்தின் பிரிந்து செல்வதற்கான உரிமையினை கோரியிருந்தது. அவ்வாறானதொரு உள்நாட்டு யுத்தத்தில் தமிழர் சனத்தொகையில் குறைந்தது மூன்று இலட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளார்கள்.அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். ஈழத்தமிழர்கள் தாம் இழந்து போன இறைமையை மீட்டெடுப்பதற்காக நடாத்திய உள்நாட்டு ஆயுத போராட்டத்தில் அளப்பெரும் தியாகங்களைச்செய்து சொல்லொன்னா துன்பங்களை அனுபவித்திருக்கிறார்கள். முள்ளிவாய்கால் பேரவலத்துடன் உள்நாட்டு யுத்தம் மௌனிக்கப்பட்டாலும் சர்வதேச ரீதியில் தமது தமது போராட்டத்தை தொடரவும் சர்வதேசத்தினூடாக தமக்கான நீதியை பெற்றுக்கொள்ளவும் வாய்ப்புகள் பல காணப்பட்டாலும் ஈன்றில் அந்த வாய்ப்புகளை பெற்றிட தமிழர்கள் தமக்கான தேசத்தில் தொடர்ந்து வாழ்ந்திட வேண்டும்.ஆனால் இன்றைய சூழலில் தேசிய அபிலாசையை வென்றெடுக்க முடியாத சூழ்நிலையே அரசினால் திட்டமிட்ட வகையில் தோற்றுக்குவிக்கப்பட்டு வருகின்றது.

உள்நாட்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு 2009 வரையான காலப்பகுதியில் கணிசமான தொகையினர் இந்தியாவிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் புகலிடம் கோரி தஞ்சம் புகுந்தும் விட்டனர்.ஆனால் எஞ்சியுள்ள இளையோர் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னராக இன்றுவரையில் தமிழ்மக்களின் செறிவில் மூன்றில் ஒரு பகுதியினர் புகலிடம் கோரி தேசியப்பரப்பிலிருந்து வெளியேறி ஐரோப்பிய நாடுகளுக்கு இடம்பெயர்ந்து அல்லது இடம்பெயர முயற்சித்து வருவதுதானது ஒரு தேசிய இனத்தின் இருப்பு கேள்விகுறியாகியுள்ளதுடன் உள்ளக சுயநிர்ணயம் யாருக்கு என்கின்ற கேள்வியும் எம்மத்தியிலே எழுந்து நிற்கின்றது.

உள்நாட்டு இன விடுதலைக்கான யுத்தம், இனப்படுகொலை, புலப்பெயர்ச்சி என்பவற்றால் ஏற்கனவே சனத்தொகையில் தமிழர்கள் நலிந்து வருகிற நிலையில் தமிழர் பரப்பில் பிள்ளைப் பேறு விகிதமும் குறைந்து வருவதானது தமிழர் செறிவில் பாரிய தாக்கத்தை செலுத்தி நிற்கின்றது. ஒரு குடும்பத்தில் ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகள் என்ற எண்ணிக்கையின் அடிப்படையிலும் மூன்றில் ஒருவருக்கு மூன்று என்கின்ற விகிதத்திலும் தமிழின பரம்பல் காணப்படுகின்றது. இனப்பரம்பலில் சடுதியான வீழ்ச்சி இன்னொருபக்கம் புலம்பெயர்ச்சி போன்ற காரணிகளால் தமிழர் சனத்தொகையில் மேலும் பாரிய வீழ்ச்சி ஏற்படக்கூடிய ஆபத்து அதிகரிக்கிறது.

**தமிழ் இளையோர் மத்தியில் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற தவிப்பு ஏன் அதிகரிக்கின்றது? இது குறித்து தமிழ் கட்சிகளோ அல்லது சமூக செயற்பாட்டாளர்களோ அல்லது புத்திஜீவிகளோ அல்லது தமிழ் சமூகமோ சிந்திக்காதது ஏன்?இதுவரை இது தொடர்பில் விழிப்புணர்வுகளை மேற்கொள்ளாதது ஏன்?**

தமிழர்கள் தமது தாயகப்பரப்பிலிருந்து 2009க்கு முன் வெளியேறுவதற்கு உக்கிரமடைந்த உள்நாட்டு போர் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.ஆனால் போர் முடிந்த பின்னராக பொருளாதார நெருக்கடியும் ஒரு காரணமாக இருக்கலாம். அல்லது ஏற்கனவே புலம்பெயர்ந்தவர்கள் பொருளாதார ரீதியாக வெற்றி பெற்று விட்டார்கள் என்ற ஒரு மாயை கூட முன்னுதாரணமாக இருந்திருக்கலாம்.

**தேசிய இனமொன்று தான் வாழும் தேசிய பரப்பினுள் சுயாட்சி அல்லது சுயநிர்ணயம் கோருவதாயின் தனக்கென கட்டமைக்கப்பட்ட அரசியல், சமூகம், பொருளாதாரம், நிலம் என்பவற்றுக்கு உரித்துடையதாக இருக்க வேண்டும்.**

ஆனால் யுத்தத்தால் தமிழரின் பொருளாதாரம் பெரும் பங்கு அழிவடைந்த நிலையில், தமிழர் பகுதிகளில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் புறக்கணிப்பு வேலை வாய்ப்பில் தமிழ் இளைஞர், யுவதிகள் புறமொதுக்கப்படல் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டோருக்குப் போதிய உதவித் திட்டங்கள், பயிற்சிகள் வழங்கப்படாமை விவசாய உற்பத்திப் பொருட்களில் போட்டி நிலமை சுற்றுலாத் துறையில் பெருநிறுவனங் களின் போட்டி, அவற்றுக்குக் கிடைக்கும் மத்திய அரசின் ஆசி தமிழர்களின் பணப் பயிர் மற்றும் பனங்கள் மீதான கட்டுப்பாடுகள் தென்னிலங்கை, இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள், தென்னி லங்கை நிறுவனங்களின் வளச் சுரண்டல்கள் போன்றவற்றால் தமிழர் பொருளாதாரம் மேலும் சரிவைச் சந்தித்து வருகின்றது.இந்நிலையில் அரசின் நிகழ்சி நிரலின் ஈழத்தமிழரை நலிந்துபோகச்செய்யும் புதிய திட்டங்களின் ஒன்றாகவே ஈழத்தமிழரை தமது தாய்நிலத்திலிருந்து அகற்றி வெளிநாட்டில் குடியேறச்செய்யும் நாசகார திட்டமாகும்.உதாரணமாக செவ்விந்தியர்களுடைய நாடு அமெரிக்கா. ஆனால் அங்கு செவ்விந்தியர்கள் இல்லை.

மாயர்களுடைய நாடு மெக்சிக்கோ. இன்று அங்கு மாயர்கள் இல்லை.சுலு பழங்குடியினருடைய நாடு தென்னாபிரிக்கா. இன்று அங்கு சுலு பழங்குடியினர் இல்லை.

பார்சிகளின் நாடு ஈரான். இன்று பார்சிகள் அங்கு இல்லை.இவ்வாறான வரலாற்றுகளோடு ஒப்பிட்டு நோக்கு கையில்

**அரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் நில அபகரிப்பு என்கின்ற புவிசார் அரசியலாலானது ஈழத்தமிழர் களின் புலம்பெயர்வுகளால் எதிர் காலத்தில்**

**வடக்குக் கிழக்கில் தமிழர் தாயகத்தை முழுமையாக கபளீகரம் செய்து ”தம்தீப கோட்பாட்டின் ஊடாக இலங்கை மண்ணை சிங்கள பௌத்தத்தின் தேசமாக பிரகடனப்படுத்துவதை இலக்காகக் கொண்டே இலங்கை அரசு மிக வேகமாகக் காய்களை நகர்த்தி வருகின்றது.**

இந்த நகர்வு இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரல் மாத்திரமல்ல தென்னிலங்கை அரசியல் தலைமைகளினதும் அவர்கள் சார்ந்த கட்சிகளினதும் தாரக மந்திரமாக உள்ளதுடன் இந்த இலக்கை நோக்கிய பயணத்தில் தென்னிலங்கை சக்திகள் கட்சி அரசியல் பேதங்களுக்கப்பால்

திரைமறைவில் கைகோர்த்து பயணிக்கின்றன. இன்றைய சூழலில் தாயகத்தை விட்டு வெளியேறும் ஈழத்தமிழர்கள் மீண்டும் தாயகத்துக்கு வருவதற்கான சூழலும் வாழ்வதற்கான சந்தர்ப்பமும் அரிதான ஒன்றாகவே காணப்படும் நிலையில் மேற்குலக வாழ்வியல் மாயைக்குள் சிக்க வைத்துவிட்டால் அதிலிருந்து மீள முடியாதுள்ளதுடன் புலம்பெயர்ந்த நாடுகளில் ஒரு அரசை தாபிக்கவும் முடியாது.இவ்வாறானதொரு நிலையில் இலங்கை அரசை நெருக்கடிக்குள் சிக்க வைப்பதற்கான பலமும் தமிழர்களுக்கு கிடைக்கப்போவதில்லை.காரணம் தாயக நிலப்பரப்பை மீட்பதற்கான கணிசமான மக்கள் தொகை தமிழ் தேசியப்பரபில் வாழவேண்டும் .அவ்வாறு வாழுகின்ற மக்கள் வீரியமான போராட்ட குணமுடைய தேச பக்திமிக்க அறிவியல் வளர்ச்சியடைந்த ஆழ்கின்ற வர்க்கமொன்று உருவாக்கப்பட வேண்டும். ஆனால் இத்தகைய புலம்பெயர்வு சாத்தியத்துக்கு அப்பாற்பட்ட அசாத்திய சூழலை தமிழர் தேசத்தில் தோற்றுவிக்கும் நிலையில் தேசிய பரப்பில் வாழும் தமிழர்களும் தமிழ்கட்சிகளும் தமிழ் தேசியத்துக்கு எதிரான திசையில் பயணிக்கும் போது மண்ணை ஒட்டிய வாழ்வியல் சிதைக்கப்பட்டு மண்ணை விட்டு வெளியேறும் மனப்பாங்கு திட்டமிட்டு விதைக்கப்பட்டுள்ளது. இது 15ஆண்டுகளின் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாபெரும் சமூக சீரழிவாகவே உற்று நோக்க முடியும்.”

**தமிழீழம்” என்கின்ற இலட்சியம் தேய்ந்து வெளிநாடு செல்வதே இன்று தமிழர்களின இலட்சியமாக போன நிலையில் சுயநிர்ணயம் இனி யாருக்கு..?**

**செல்வி வினாயகமூர்த்தி**

## சீனாவை பாதித்த சுவாச நோய் இலங்கையிலும் பரவி வருகிறது பேராசிரியர் ஜீவாந்த எச்சரிக்கை!

நாடு முழுவதும் பதிவாகும் சளி, காய்ச்சல் உள்ளிட்ட சுவாச அமைப்பு தொடர்பான நோய்களானது பல வைரஸ்களின் கலவையாக இருக்கலாம் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் உயிரணு உயிரியல் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி பேராசிரியர் சந்தன ஜீவாந்த தெரிவித்தார்.” இது சீனாவில் இருந்து பதிவாகும் சளியின் கலவையாகும். சீனாவில் பரவிவரும் நிமோனியா நிலைமை நாட்டிலும் பரவுமானால், அதனைக் கண்டறியும் ஆய்வகங்கள் நாட்டில் உள்ளன. வைரஸ் தொடர்பில்

இதுவரையில் குறிப்பிட்ட தகவல்கள் எதுவும் இல்லை.” எனவும் சந்தன ஜீவந்த கூறினார். சீனாவில் பீஜிங், லியோனிங் உள்ளிட்ட மற்றும் பல நகரங்களில் உள்ள குழந்தைகள் வைத்தியசாலைகள் இந்த நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளால் நிரம்பியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதனையடுத்து, வட சீனாவில் பரவி வரும் நோய் பற்றிய அனைத்து தகவல்களையும் வழங்குமாறு உலக சுகாதார நிறுவனம் சீனாவிற்கு அறிவித்திருந்தது. அதிகரித்து வரும் சுவாச பாதிப்புகளுக்குப் பின்னால் புதிய வைரஸ் இல்லை என சீன சுகாதாரத்துறை அதிகாரபூர்வ மாக விளக்கமளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் சின்னத்துடன் “ரீ-சேர்ட்“ அணிந்தவருக்கு மறியல்!

மாவீரர் தின அஞ்சலியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் படம் மற்றும் சின்னம் பொறிக்கப்பட்ட ரீ-சேர்ட் அணிந்த இளைஞன் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இளைஞரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இளைஞர் குற்ற மனப்பாங்குடன் நடக்கவில்லை, அவரது செயலால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை. பொலிஸார் விசாரணை மேற்கொண்டால் அதை அறியலாம் என்று இளைஞர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பான விசாரணை இன்னமும் முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்ததை அடுத்து சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டதுடன், விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்கவும் உத்தரவிட்டது.

தேசியம் THESIYAM

**ஆசிரியர் பீடம்**

தொலைபேசி: +94 76 567 3339
மின்னஞ்சல்: thesiyamnews@gmail.com
இணையம்: www.thesiyamnews.com



# வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதை

வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதையை எங்களுடைய வாசகர்களுக்கு புதிதாக சொல்லத்தேவையில்லை. வளர்த்த பிள்ளைகள் பெற்றோரை எதிர்ப்பதற்கு உவமையாக இந்த மொழியை எங்களுடைய மூதாதையர்கள் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறோம்.இன்று பெரிதளவில் இந்த உவமை சொல்வதை கேட்கமுடிவதில்லை. ஆனால், இன்று இந்த உவமையை மீண்டும் ஞாபகப்படுத்துவதாக ஒரு சம்பவம் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இடம்பெற்றிருக்கிறது. 2010ஆம் ஆண்டு சுமந்திரனை தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராக்கி அரசியல் முகவரி கொடுத்து அழகு பார்த்த இரா.சம்பந்தனுக்கு 13 வருடங்கள் கழித்து வெகுமதியான ஒரு நன்றிக்கடனை சுமந்திரன் வழங்கி அழகு பார்த்திருக்கிறார்.

ஆம்,அண்மையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்த சுமந்திரன், பொராளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் அவருடைய முதுமையினால் செயற்பாட்டு அரசியலில் பங்களிப்பு செய்யமுடியா திருப்பதன் காரணமாக அவர் தனது பதவியை துறக்க வேண்டும். 288 பாராளுமன்ற நாட்களில் வெறுமனே 39 நாட்களில் தான் பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருக்கின்றார்.அதனடிப்படையில், அவருடைய வருகை வீதம் 13.6 வீதமாக உள்ளது.அவ்வாறான நிலையில் அவருக்கு பாராளுமன்ற சம்பளமாக 4 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ள து.எரிபொருள், தொலைபேசி மற்றும் போக்குவரத்து உள்ளிட்டவற்றுக்காக 4இலட்சத்து 19 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தனின் முதுமை காரணமாக அவர் தொடர்ச்சியாக பாராளுமன்றத்துக்கு வருகை தரமுடியாதிருக்கின்றமை தொடர்பில் நாங்கள் கரிசனை கொண்டிருக் கின்றோம். எவ்வாறாயினும், சம்பந்தன் தனது முதுமை நிலைமை காரணமாக அவரால் செயற்பாட்டு ரீதியான விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆக வே, அவர் பதவியைத் துறக்க வேண்டும் என்பது தான் எனது தனிப்பட்ட கருத்து என்று தெரிவித்திருந்தார்.

இது ஒரு விதத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், இல்லா விட்டாலும் தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைகள் குறிப்பாக பாராளுமன்றத்தை அலங்கரித்த அலங்கரித்துக்கொண்டிருக் கின்ற பிரதிநிதிகளால் தமிழர்கள் பெற்றுக்கொண்ட நன்மைகள் தொடர்பில் சிந்திப்பது அவசியம். சம்பந்தன் முதுமை காரணமாக வீட்டுக்குள் முடங்கியிருக்கிறார். ஆனால், பாராளுமன்றம் செல்லும் தலைவர்கள் தமிழ் மக்களுக்காக சாதித்தவை என்ன என்பதை சுமந்திரனால் பட்டிய லிட முடியுமா?தமிழர் தாயகத்தில் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு சிங்கள-பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கி றது. அதேபோல்,பௌத்தவாதிகள் சுதந்திரமாக தங்களுடைய நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்பாறையையும், திருகோணமலையையும் ஏறத்தாழ முழுமையாக கபளீகரம் செய்துள்ள சிங்கள பேரினவாதம் மட்டக்களப்பை முழுமையாக கபளீகரம் செய்வதற்கான திட்டங்களை வெளிப்படையாகவும் அத்துமீறலாகவும் செய்து வருகிறது. தொல்பொருள் அடையாளங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்த 164 இடங்கள் தற்போது 600 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.இவ்வாறு தமிழர் தாயகம் நாளுக்கு நாள் விழுங்கப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில்,பதவி அரசியல்,போட்டி அரசியல், சிறுபிள்ளைத்தனமான அரசியல் செய்துகொள் வதிலிருந்து பின்வாங்குவதாக தெரியவில்லை. மிகப்பெரிய மனித அவலத்தை கண்ட சமூகம், மிகப்பெரும் சேதங்களை கண்ட சமூகம்,நீண்டகாலம் மண்ணுக்காகவும் உரிமைக்காகவும் போராடி பல ஆயிரக்கணக்கான உயிர்களை மண்ணுக்காக தியாகம் கொடுத்த ஒரு இனத்துக்கு தலைமை தாங்குவோர் சில்லறைத்தனமான அரசியலை முன்னெடுப்போராக இருக்கமுடியாது.அவ்வாறானவர்கள் தமிழர்களை ஆளவேண்டுமென்பதற்காக தலைவன் என்ற நாமத்துக்கா கவும் முயலமுடியாது.அது தமிழினத்துக்கு அகௌரவமாகவே அமையும். எனவே தமிழர்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு இருப்போர் தமிழினத்தின் கடந்தகால வீர வரலாற்றையும் அவர்கள் கடந்துவந்த பாதையையும் கவனத்தில் கொண்டு ஈழத்தமிழரையும் மண்ணையும் மீட்கும் பக்குவத்தையும் இராஜதந்திரத்தையும் வளர்த்துக்கொள்ளவேண்டும். அதைவிடுத்து பொதுவெளியில் சிறுபிள்ளைத்தனமாக தமிழ் தரப்புகளே தங்களுக்குள் சண்டையிடுவதும் ஒருவரையொருவர் போட்டுக்கொடுப் பதும் ஒருவரையொருவர் இழிவுபடுத்துவதும் சமூகத்தின் விடுதலைக்கு பொருத்தமில்லாதது. இவ்வாறானவர்கள் நிச்சயமாக தமிழர்களின் பிரதி நிதிகளாக இருப்பதற்கு தகுதியானவர்களாக இருக்கமுடியாது என்பதை கூறிவைக்கின்றோம்.

# தேசியப் பார்வை...

தேசியன்

## மாணவர்களை தவறான பாதைக்கு இட்டுச்செல்லும் தொலைக்காட்சி நிறுவனம் பெற்றோரே அவதானம்!!!

தழிழர் தேசியத்தில் சம காலத்தில் இடம்பெறும் சில நிகழ்வுகள் இளம் சமுதாயத்தை படு பாதாளத்துக்குள் இட்டு சென்றுவிடும் நிகழ்வுகள் அதிகமாகவே இடம்பெறுவதை நாம் அவதானிக்கிறோம்.

இதில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று நடத்தும் மாணவர்கள் பங்குபெறும் விவாத போட்டிகளில், கல்விக்கு அப்பால் அதாவது மாணவர்கள் மத்தியில் சினிமா மோகந்தை வளர்க்கும் விதமாக விவாதிக்கப்பட்ட சில தலைப்புகள் பெற்றோர் மத்தியிலும் கல்வியாளர்கள் மத்தியிலும் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது.

அந்த தொலைக்காட்சி நடத்திய விவாதப் போட்டி யில் இன்றைய இளைஞர்கள் தலையில் வைத்து கொண்டா டுவது “தல“ “தளபதி “வேட பொருத்தம், உடல் மொழி என்பவற்றை வெளிப்படுத் துவதில் சிறந்தவர் “கமல் ஹாசன் ““சிவாஜிகணேசன்“ சினிமா படவெற்றிக்கு காரண மாக அமைவது “பாடல்கள்“ “கதைக்களம் ஒரு திரைப்படத் தினுடைய நிலைத்திருப்பிற் குக் காரணம் திரைக்கதையா? பாடலாரமக்கள் மனங்களை ஆளும் இசையமைப்பாளர் ஏ ஆர் “ரஹ்மான்“ “இளைய ராஜா“ நடிகர் திலகத்தை இம யம் வரை கொண்டு செல்ல வைத்தது “வேடப்பொருத்தம்“ “உடல்மொழி“ தொலைக்காட்சி தொடர்கள் மக்களை “சீர்படுத் துகின்றன“ “சீரழிக்கின்றன“ மக் கள் மனதில் நீங்காத இடத்தை பெற்ற பெரும்பாடகி “சுசீலா“ “ஜானகி “தமிழ் இசையமைப் பாளர்களில் சிறந்த பாடல்களை தந்தவர் “மெல்லிசை மன்னர்“ “இசையானி“ தத்துவார்த்தமான பின்னணி பாடகர் “பாலசுப்ர மணியம்“ “ஜேசுதாஸ்“ ஆகிய தலைப்புகளின் கீழ் விவாதங்களை அந்த நிறுவனம் மாணவர்களை வைத்துக்கொண்டு நடத்தியிருந்தது. தொலைக்காட்சி வழி மாணவர்கள் பங்குபெறும் விவாத போட்டிகள் மாணவர்கள் மத்தியில் Critical thinking skills,Communication skills,Knowledge,Civic en gagement போன்ற அடிப்படை விடயங்களில் மாணவர்களை முன்னோக்கி வழி நடத்தும் வகையில் உருவாக்கப்படுகின்றன.

**ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் கல்லூரி ஒன்றின்**
**அதிபரின் சமூக பொறுப்பு தான் சார்ந்து நீற்கும்**
**ஆசிரியர் சமூகத்திற்கு முன்மாதிரியாக**
**இருக்க வேண்டும்.வர்த்தக ரீதயில் தொழில்**
**செய்யும் இவ்வாறான தொலைக்காட்சி**
**நிறுவனங்களுக்கு சமூக அக்கறை என்பது**
**ஒரு பொருட்டாக இருக்கமாட்டாது.**
**ஆனால் பாடசாலை அதிபர்களுக்கும்**
**ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் அந்த சமூக**
**பொறுப்பு இருக்கிறது.**

சிங்கப்பூரின் 'The Arena' இங்கிலாந்தின் 'Debating Matters' Debate அமெரிக்காவின் ”Public Forum Debate' Lincoln&Douglas Debate ருவாண்டாவின் 'Debate League“ போன்ற பல மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சிகளின் வடிவமைப்பில், தலைப்புகள் தெரிவில் மேற்படி அடிப்படை விடயங்கள் கவனத்தில். ஆனால் யாழ்ப்பாணத்தில் தலயா அல்லது தளபதியா என்ற தலைப்பை வைத்து விவாதிக்க பாடசாலை அதிபர்கள் மாணவர்களை எப்படி பாடசாலை சீருடையுடன் அனுப்புகின்றார்கள் என தெரியவில்லை.

ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் கல்லூரி ஒன்றின் அதிபரின் சமூக பொறுப்பு தான் சார்ந்து நிற்கும் ஆசிரியர் சமூகத்திற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.வர்த்தக ரீதியில் தொழில் செய்யும் இவ்வாறான தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு சமூக அக்கறை என்பது ஒரு பொருட்டாக இருக்கமாட்டாது. ஆனால் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் அந்த சமூக பொறுப்பு இருக்கிறது. இனிவரும் காலங்களில் மாணவர்களை அவர்களுடைய எதிர்கால நலனுடன் சம்பந்தப்பட்ட கல்வி-தொழில் அறிவியல் தொழிநுட்ப ரீதியில் அவர்களுக்கான காலத்தை அமைத்துக்கொடுக்கும் களங்களை இனம் கண்டு அதன் பின்னால் மாணவர்களை வழிநடத்துவதே எதிர்கால சமூகத்துக்கு பொருத்தமாகும்.அதை விடுத்து இந்திய சினிமா மோகத்தை தமிழர் தாயகத்தில் பரப்பி அதன் வழியாக தங்களது வர்த்தக நலனை பெருக்கிக்கொள்ள முனையும் முன்னோக்கி வழி நடத்தும் வகை இவ்வாறான தரப்புகளிடமி ருந்து கல்வியாளர்களும் பெற்றோரும் அவதானமாக இருக்க வேண்டுமென்பதை கூறிவைக்கின்றோம்.

# மாவீரர் நாள் 2023





**நிலாந்தன்**

ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரான பதினைந்தாவது மாவீரர் நாள் இது.கடந்த 15 ஆண்டுகளாக மாவீரர் நாள் போன்ற நினைவு நாட்களை ஒரு கட்டத்துக்கு மேல் பரவலாக மக்கள் மயப்படுத்துவதில் சட்டப் பிரச்சினைகள் இருந்தன.நீதிமன்றங்கள் நினைவு கூர்தலுக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கும் போது,நினைவு கூர்தலை ஒப்பீட்டுளவில் மக்கள் மயப்படுத்த கூடியதாக இருந்தது. எனினும் கடந்த 15 ஆண்டுகளிலும் மக்கள் மத்தியில் இருந்து பயத்தை முழுமையாக அகற்ற முடியவில்லை. அது ஒரு சட்டப் பிரச்சினை மட்டுமல்ல. அரசியல் பிரச்சினையுந்தான். அரசியல் தலைமைத்துவப் பிரச்சினையுந்தான்.

**விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட நினைவு நாட்களின்போது நீதிமன்றங் களின் முடிவுகளே பெருமளவுக்கு நினைவு கூர்தலைத் தீர்மானிக்கும் ஒரு நிலைமைதான் கடந்த 15 ஆண்டுகளாகக் காணப்படுகின்றது.**

இம்முறை வடக்கிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் பெரும்பாலான நீதிமன்றங்கள் நினைவு கூர்தலுக்குச் சாதகமாக முடிவெடுத்துள்ளன.இந்த விடயத்தில் சட்டவாளர்களாகக் காணப்படும் தமிழ் அரசியல்வாதிகள் ஒப்பீட்டளவில் நிரந்தரமான ஒரு சட்ட ஏற்பாட்டைக் குறித்துச் சிந்தித்திருக் கக்கூடிய ஒரு காலகட்டம் இருந்தது என்று ஒரு சட்டவாளர் சில ஆண்டு களுக்கு முன் சுட்டிக்காட்டினார். 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறு கால நீதிக்கான 30/1 தீர்மானத்தின்படி மக்களுக்கு நினைவு கூரும் உரிமை உண்டு. தனிப்பட்ட அல்லது பொது நினைவுச் சின்னங்களை உருவாக்கும் உரிமையும் உண்டு.நிலை மாறுகால நீதியின் நான்கு பெரும் தூண்களில் ஒன்று ஆகிய இழப்பீட்டு நீதியின் கீழ் அது குறித்து பேசப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க இழப்பீட்டு நிதிக்கான அலுவலகத்துக்குரிய சட்ட வரைவைக் கொண்டு வந்த பொழுது அதில் நினைவு கூர்தல் தொடர்பாக தமிழ் நோக்கு நிலையில் இருந்து சில ஏற்பாடுகளைத் தமிழ் அரசியல்வாதிகள் இணைத்திருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

அவ்வாறு முன் யோசனையோடு செயற்பட்டு இருந்திருந்தால், இப்பொழுது ஒவ்வொரு ஆண்டும் நீதிமன்றம் ஏறும் நிலைமை ஒப்பீட்டளவில் தவிர்க்கப்பட்டி ருக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட் டினார். ஆனால் அதி உயர் சட்டமாகிய யாப்பில் இருப்பதையே அதாவது 13-வது திருத்தத்தையே முழுமையாக அமல் படுத்தாத ஓர் அரசியல் பாரம்பரிய முடைய நாட்டில், நினைவு கூர்தல் பொறுத்து உருவாக்கப்படும் சட்ட ஏற்பாடுகள் எந்தளவுக்கு மதிக்கப்படும் என்ற கேள்வியும் இங்கு உண்டு.

எதுவாயினும் கூட்டமைப்பு நிலைமாறு கால நீதியின் பங்காளியாகச் செயற்பட்ட அக்காலகட்டத் தில், தென்னிலங்கையில் ஜனநாய கத்தைப் பாதுகாப்பதற்காக உழைத்த அக்கால கட்டத்தில்,தமிழ் மக்களின் நினைவு கூரும் கூட்டுரிமை தொடர்பில் ஏன் முன்யோசனையோடு செயல்பட்டிருக்க வில்லை என்று மேற்படி சட்டவாளர் கேள்வி எழுப்பினார்.

அரசியல்வாதிகளாக உள்ள தமிழ்ச் சட்டவாளர்கள் இந்த விடயத்தில் மட்டு மல்ல நினைவு கூர்தல் சம்பந்தப்பட்ட வேறு ஒரு விடயத்திலும் பொருத்த மான,தாக்கமான விதங்களில் செயல் பட்டிருக்கவில்லை என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அது என்ன வேனில் படை முகாம்களாக மாற்றப் பட்டிருக்கும் துயிலுமில்லங்கள் பற்றிய விவகாரம் ஆகம்.

1996 இல் யாழ் குடாநாடு முழுமையாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபின்,கடந்த 28 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள ஒரு விடயம் இது .யாழ்.குடாநாட்டில் கோப்பாய், கொடிகாமம், வடமராட்சி,எள்ளங்குளம் ஆகிய மூன்று துயிலுமில்லங்கள் படைத்தளங்களாக மாற்றப்பட்டன. அதுபோலவே 2009க்கு பின் வன்னியில், கிளிநொச்சியில்,தேராவில் துயிலுமல்லத் திலும் முல்லைத் தீவில் ஆலங்குளம் ,முள்ளியவளை,அளம்பில் ஆகிய துயிலுமில்லங்களிலும் படைக்கட்டு மாணங்கள் உண்டு. மட்டக்களப்பில் தாண்டியடி துயிலுமில்லம், வவுனியாவில் ஈச்சங்குளம் துயிலுமில்லம் ஆகிய வற்றில் படை முகாம்கள் உண்டு. மொத்தம் ஒன்பதுக்கும் குறையாத துயிலுமில்லங்களில் படைமுகாம்கங்கள் உண்டு.

போரில் வெற்றி கொள்ளப்பட்டவர்களின் புதை மேட்டை அவமதிப்பது என்பது நவீன அரசியலில் ஏற்றுக்கொள் ளப்படாத ஒரு நடைமுறை. மன்னர்களின் காலத்தில்கூட துட்டகெமுனு தோற்கடிக் கப்பட்ட எல்லாளனுக்கு அனுராதபுரத் தில் ஒரு நினைவுத் தூபியைக் கட்டினான்.அதைக் கடந்து போகின்றவர்கள் அதற்கு மரியாதை செலுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டான்.மன்னர் காலத்தில் பேணப்பட்ட அந்த அரசியல் மாண்பைக்கூட நவீன காலத்தில் இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசியல் பேணவில்லை.

தோற்கடிக்கப்பட்டவர்களின் புதைகுழி களின் மீது வெற்றி பெற்றவர்கள் தமது படை முகாம்களைகக் கட்டுவது என்பது எதிரியை இறந்த பின்னரும் தண்டிக்க விரும்பும் ஒரு கூட்டு மனோநிலையின் வெளிப்பாடுதான்.இறந்த பின்னும் அவர்களை நிம்மதியாகத் துயில விடக்கூடாது,இறந்த பின்னும் அவர்களுடைய நெஞ்சை மிதித்து கொண்டு நடக்க வேண்டும் என்ற பழிவாங்கும் உணர்ச்சியை அது வெளிப்படுத்துகின்றது.போரில் உயிர்நீத்த வர்களின் மார்பின் மீது குந்தி யிருப்பது என்பது போர் வெற்றியைக் கொண்டாடு வதில் உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லா வரையறை களையும் அவமதிக்கும் ஒரு நடை முறைதான்.

அண்மையில் ரணில் விக்கிரமசிங்க ஒரு பொது நினைவு சின்னத்தை உருவாக்கு வதற்கான நிபுணர் குழு ஒன்றை உருவாக்கினார்.அக்குழுவினர் திலீபனின் நினைவு நாட்களின்போது யாழ்.கச் சேரியில் ஒரு சந்திப்பை ஒழுங்கு படுத்தினார்கள்.யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இரண்டு சிங்கள நிபுணர்களும் அழகியல் துறை பேராசிரியர்கள் ஆகும் .அவர்களிடம் இவ்வாறு துயிலுமில்லங்களில் படைத்தளங்கள் கட்டப்பட்டுள்ளன என்பது சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறு இறந்தவர்களையும் அவமதிக்கும் ஓர் அரசியல் ராணுவச் சூழலில்,எப்படி பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்கலாம் என்றும் அவர்களிடம் கேட்கப்பட்டது.

இந்த விடயத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஒரு விவகாரமாக எழுப்பியிருக்க வேண்டிய பொறுப்பு தமிழ் அரசியல்வாதிகளுக்கு உண்டு. கடந்த 15 ஆண்டுகளாக அதை அவர்கள் செய்திருக்கிறார்களா? குறிப்பாக நிலை மாறுகால நீதியின் பங்காளியாக கூட்டமைப்பு செயற்பட்ட காலகட் டங்களில் ஏன் அந்த விவகாரத்தை ஐநாவில் எழுப்பவில்லை? ஏனைய உலகளாவிய மனித உரிமை அமைப் புகள் மத்தியில் எழுப்பவில்லை? அண்மையில் சிறீதரன் நாடாளு மன்றத்தில் இது தொடர்பில் பேசியிருக் கிறார்.அந்த உரையில் இதுதொடர்பான புள்ளி விபரங்கள் உண்டு .

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களை தத்தெடுக்க முற்பட்டும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இந்த விடயத்தில் எந்தளவுக்கு அக்கறை காட்டியிருக் கிறது? பெரும்பாலான கட்சிகள் இறந்த காலத்தைத் தத்தெடுக்க முயற்சிக் கின்றன. தமிழ் அரசியலில் பெரும் பாலானவர்கள் தங்களை இறந்த காலத்தின் வாரிசுகளாகக் காட்டிக் கொள்ளப் பார்க்கிறார்கள். ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சி யாகக் காட்டிக்கொள்ளப் பார்க்கிறார் கள். துயிலுமில்லங்களை எப்படித் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்று சிந்திக்கிறார்கள்.ஆனால் மேற்சொன்ன விடயத்தில் அவர்கள் பயன் பொருத்தமான விதங்களில் அக்கறை காட்டியிருக்கிறார்களா?

அண்மையில் விசுவமடு தேராவில் துயிலும் இல்லத்தை விடுவிக்க கோரி ஒரு போராட்டம் இடம்பெற்றது. அத்து யிலுல்லத்தின் ஒரு பகுதி இப்பொழுதும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. அதை விடுவிக்க வேண்டும் என்று போராடியது சரி. ஆனால் அந்தப் போராட்டத்தை மாவீரர் நாளுக்கு சில கிழமைகளுக்கு முன்னதாக முன்னெடுப் பது என்பது, வளமையான தமிழ் அரசியலின் மந்தத்தனத்தையே காட்டு கிறது.

இது துயிலுமில்லங்களை அல்லது நினைவுத் தூபிகளை குறிப்பிட்ட நாளுக்கு முன்னதாக சென்று துப்புரவாக்குவதற்கு நிகரானது. கடந்த 15ஆண்டுகளாக பெரும்பாலும் அதுதான் நடந்து வருகிறது.துயிலுமில்லங்களை நவம்பர் மாதங்களில் மட்டும் துப்புர வாக்குவதும், நவம்பர் மாதங் களில் மட்டும் அவற்றைப் புனிதமான இடங்களாக உருவகிப்பதும் சரியா? புனிதமான நினைவிடங்கள் என்றால் அவை ஆண்டு முழுவதும் பராமரிக்கப்பட வேண்டும்.ஆயுதப் போராட்ட காலகட் டத்தில் அப்படித்தான் அவை பராமரிக் கப்பட்டன.ஆனால் இப்பொழுது எத்தனை துயிலுமில்லங்கள் அவ்வாறு தொடர்ச் சியாகப் பராமரிக்கப்படுகின்றன? அவ் வாறு பராமரிக்கத் தேவையான கட்டமைப்புக்கள், ஏற்பாடுகள் உண்டா? அப்படித் தான்,மாவீரர்களின் குடும்பங் கள்,புனர்வாழ்வு பெற்ற போராளிகள், உடலுறுப்புக்களை இழந்த போராளிகள், யுத்த விதவைகள், யுத்த அனாதைகள் போன்றோரைத் தொடர்ச்சியாகப் பராமரிக்கும் கட்டமைப்புகள் எத்தனை உண்டு?

மாவீரர்களின் பெற்றோரை மாவீரர் மாதத்தில் மட்டும் அழைத்து அவர்க ளுக்கு மரக்கன்றுகளை வழங்கு வதும் உதவிப் பொதிகளை வழங்குவதும் போதாது. அவர்களுக்கு தொடர்ச்சியாக உதவி வழங்க வேண்டும். அல்லது அவர்கள் உழைத்து சம்பாதிக்க கூடிய விதத்தில் பொருத்தமான முதலீடுகள் செய்யப்பட வேண்டும். அப்படித்தான் மாவீரர்களின் குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்ற போராளிகள், உடலுறுப்புக்களை இழந்த போராளிகள், யுத்த விதவைகள், யுத்த அனாதைகள்போன்றோரின் விடயத்திலும்.ஆனால் அவற்றுக்குரிய கட்டமைப்புகள் அதிகரித்த அளவில் இல்லை. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டும் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டும் அல்லது ஒரு குறிப்பிட்ட கிழமையில் மட்டும் தியாகிகளையும் தியாகிகளின் குடும்பங்களையும் போராட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் கௌர விப்பது அல்லது அவர்களுக்கு உதவி செய்வது என்பது ஒரு விதத்தில் அரசியல் சடங்கு தான்.அதை அதற்குரிய புனிதத்தோடு விசுவாசமாகச் செய்வது என்று சொன்னால்,அதைத் தொடர்ச் சியாகச் செய்ய வேண்டும். புனிதம் என்பதே தொடர்ச்சிதான். அதைத் தொடர்ச்சியாகச் செய்வது என்று சொன்னால், அதற்கு வேண்டிய கட்டமைப்புக்களை உருவாக்கவேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஏற்பாடு செய்யப்படும் கொண்டாட் டங்களில் கோடிக்கணக்கான காசு புரள்கிறது. உதாரணமாக அண்மையில் சிட் சிறீராமின் இசை நிகழ்ச்சிக்கு வழங்கப்பட்ட தொகை மிகப்பெரியது. இருபது லட்சம் கனேடிய டொலர்கள். அதில் சிறு துளி போதும். மாவீரர்களின் குடும்பங்களையும் புனர்வாழ்வு பெற்ற போராளிகளையும் பராமரிப்பதற்கு. எனவே தமிழ் அரசியல்வாதிகள் காசு இல்லை என்ற ஒரு காரணத்தை கூற முடியாது. உரிய கட்டமைப்புகளை பொருத்தமான விதங்களில் உருவாக் கினால், காசை வெளியில் இருந்து எடுக்கலாம்.நினைவு நாட்களுக்கும், நினைவுகூரும் நிகழ்வுகளுக்கும், நினைவிடங்களுக்கும் உரிமை கோரும் அரசியல்வாதிகள், இந்த விடயத்தில் நினைவு கூர்தலின் புனிதத்தைத் தொடர்ச்சியைப் பேணத்தக்க விதத்தில் கட்டமைப்புகளை உருவாக்குவார்களா? கட்டமைப்புகளை கட்சிசாரா பொதுக் கட்டமைப்புகளாக உருவாக்கினால். அது மேலும் பொருத்தமாக இருக்கும்.

# அபிவிருத்தியில் பங்களிக்காத அம்பாந்தோட்டை துறைமுகம்.




ஹம்பாந்தோட்டை துறைமுகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து வருமனம் ஈட்டும் திட்டங்களை கண்டறியாமை தொடர்பில் துறை சார்ந்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கவலை தெரிவித்த நிலையில் வருமானம் ஈட்டும் மார்க்கங்களை கண்டறிவது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதியை அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்காக 99 வருட குத்தகைக்கு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது.

குறித்த நிலத்தை வழங்குவதற்கு மக்கள் போராட்டம் குறித்த பகுதியில் இடம்பெற்ற நிலையில் போராட்டக் காரர்களை விரட்டியடித்து 2017 யூலை 29 ஆம் திகதி சீனா அரசாங்கத்துடன் அம்பாந்தோட்டை துறைமுகப் பகுதியில் வைத்து ஒப்பந்தம் கைச்சாத்தானது.

ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து வருமானத்தை ஈட்டித்தரும் துறைமுகமாக அம்பாந்தோட்டை துறைமுகம் காணப்படாமை தொடர்பில் பல்வேறு தரப்பினரும் அதிர்த்தியை வெளியிட்டு வருகின்றனர்.

இதனை தொடர்ந்து அண்மையில் துறை சார்ந்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் மொத்த பங்குகளில் 15% இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமானது எனவும், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இதுவரை எவ்வித இலாபமும் கிடைக்க வில்லை என வெளிப்படையாகவே தெரிவித்தார்.

கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் இலங்கையில் ஏற்பட்டுள்ள சமீபத்திய பொருளாதார மந்தநிலை காரணமாக, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தால் அதன் வருவாயை அதிகரிக்கவும் இலாபத்தை ஈட்டவும் முடியவில்லை.

இந்த சந்திப்பின் போது ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் புதிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு



மத்திய வங்கி (CB) மற்றும் முதலீட்டு சபை (BoI) ஆகியவற்றுடன் உள்ள பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என அம்பாந்தோட்டை துறைமுக பிரதான நிறைவேற்று அதிகாரி சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண அமைச்சு தலையிடும் என்றும் அமைச்சர் தெரிவித்ததுடன் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கையாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை மீள் ஏற்றுமதி செய்வதுடன்,கொள்கலன்களின் மீள் ஏற்றுமதியை எதிர்காலத்தில் ஆரம்பித்தால் துறைமுகம் இலாபமடைய முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

எனவே,ஹம்பாந்தோட்டையை இலாப கரமான துறைமுகமாக மாற்றுவதற்கான முன்மொழிவுகள் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்களை பணிப்பாளர் சபையின் ஊடாக அமைச்சுக்கு சமர்ப்பிக்குமாறு அமைச்சர் துறைமுக அதிகாரசபை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தேவைப்படும் பட்சத்தில் குறித்த முன்மொழிவுகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் இந்தியப் பெருங்கடலில் பயணிக்கும் அதிகளவான கப்பல்களை ஹம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுகங்களுக்கு ஈர்ப்பதற்காக SLPA மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்துடன் இணைந்து செயலூக்கமான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

ஏனெனில் ஐரோப்பாவுக்கும்,ஆசியாவுக்கும் இடையிலான கடல் வழியில் இலங்கையின் தென் பகுதியில் முக்கியமான இடத்தில் அமைந்திருக்கும் அம்பாந்தோட்டை துறைமுகம் சூயஸ் கால்வாய் அருகே மலாக்கா நீரிணைப்புக்கு அருகில் அமைந்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் 36 ஆயிரம்



கப்பல்களைக் கையாளும் வசதி கொண்டதாகவும் இதில் 4 ஆயிரத்து 500 எண்ணெய் கப்பல்களும் அடங்கும்.

இந்தத் துறைமுகம் மார்க்கமாகச் செல்லக்கூடிய கப்பல்களுக்கு சுமார் மூன்று நாட்கள் பயண நேரத்தை குறைக்கக்



கூடியது. இதனால் எரிபொருள் தேவையும் கணிசமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனாலும் குறித்த துறைமுகத்தை சீனா இந்தியாவை வேவு பார்க்கும் இராணுவ தளமாக மாற்றம் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருவது இலங்கை இந்திய உறவில் புதிய சிக்கல்களை உருவாக்குகிறது.

ஏன் எனில் இந்தியாவின் பாதுகாப்பு இலங்கையின் வெளியுறவு கொள்கையில் தங்கியுள்ள நிலையில் சீனா இலங்கை உறவு இந்து சமுத்திரத்திர பிராந்தியத்தில் அமைதி இன்மையை ஏற்படுத்திவிடும் என அரசியல் ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

இவ்வாறான நிலையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீன ஆதிக்கம் பொருளாதார விடையங்களுடன் மட்டுப்படுத்தப்படுமானால் பிராந்தியத்தில் அமைதியான சூழலை ஏற்படுத்தும்.

அவ்வாறு இல்லாமல் இந்தியாவை வேவு பார்ப்பதும் இராணுவ தேவைகளை கையாளும் மத்திய நிலையமாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா பயன்படுத்தும் ஆனால் இலங்கை இந்திய உறவில் தொடர்ந்தும் விரிசலை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை..

**அஞ்சு அபிராம்**

## பனிப்பாறையைப் போல யாழின் கல்வி நிலை! மாவட்டச் செயலர் ஆதங்கம்

கடலின் மேலே 30 சதவீதமே பனிப்பாறை தெரியும். 70 சதவீதம் நீரினுள் அமிழ்ந்திருக்கும். அதைப் போன்றே யாழ்ப்பாணத்தின் கல்வி நிலையும் பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. க.பொ.த. சாதாரண தரத்தில் ஒரு சில உயர் பெறுபேறுகளை வைத்துக்கொண்டு மாவட்டம் கல்வி நிலையில் உயர்ந்துவிட்டதாக தம்பட்டம் அடிக்க முடியாது என யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபால சுந்தரன் தெரிவித்தார். திருமறைக் கலாமன்ற தினம் கலைத் தூது மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்ட வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் கல்வியில் சிறந்த நிலையை அடைந்துவிட்டோம் என்று சொல்ல முடியாது. அறிவு, திறன், மனப்பாங்கு மூன்றும் சேர்ந்திருக்கவேண்டும். நாம் அறிவில் மாத்திரம் உயர்வடைவதால் எமது சமூகம் முன்னேறாது. எங்களிடம் திறன், மனப்பாங்கு இரண்டும் இல்லை. அவற்றை வளர்ப்பதற்கு இணைப்பாட விதானச் செயற்பாடுகளே துணைபுரியும். இன்றைய பிள்ளைகள் இணைபாட விதான செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு விருப்பம் உடையவர்களாக இருந்தாலும், பெற்றோருக்கு விருப்பம் இருந்தாலும்

நேரமின்மை பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. இதனால்தான் நான் தனியார் கல்வி நிறுவனங்களை ஆகக் குறைந்தது வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடும் முடிவை எடுத்தேன். அதற்கும் பலர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆனாலும் இந்த முடிவை நான் மாற்றப் போவதில்லை. இப்போது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் பலருக்கு 9 ஏ வந்ததாக முகநூல்களில் போடுகின்றனர். அவர்களால் போரில் பின்னடைந்த இந்தச் சமூகத்தை கட்டியெழுப்பும் திறன் இருக்கின்றதா? இல்லை. எனவே திறன் மற்றும் மனப்பாங்கு இல்லாத கல்வியால் சமூகத்தில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என்றார்.

**தேசியம் பத்திரிகையில்**

**உங்கள்**

**விளம்பரங்களை**

**பிரசுரிக்க**

**தொடர்பு**

**கொள்ளுங்கள்..!**

**தொலைபேசி :**

**021 222 7557**

**+94 76 567 3339**

தேசியம் www.thesiyamnews.com THESIYAM தேசியம்

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என். நகுலேஸ் அவர்களின் கைது தொடர்பில் அவரின் மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு




கடந்த 2023.11.25ம் திகதி மாவீரர் பெற்றோர்களை கௌரவிக்கும் முகமாக ஜனநாயகப் பேராளிகள் கட்சியினால் வெல்லாவெளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு தொடர்பில் வெல்லாவெளி பொலிசாரால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் அவர்களின் கைதானது மனித உரிமை மீறலும், அவர் மீதான குற்றச் சாட்டுகள் பொய்யானது எனவும் தெரிவித்து அவரின் மனைவி மட்டக்களப்பில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றினை மேற்கொண்டிருந்தார்.

அரசாங்ககத்தினால் எதுவித தடைகளும் விதிக்கப்படாத நிகழ்வுக்கு பொலிசார் நீதிமன்றத் தடையுத்தரவினைப் பெற்று நிகழ்வு நடைபெறும் தினத்தன்றே, நிகழ்வு நடைபெறும் இடத்தில் வைத்தே அவரிடம் தடையுத்தரவினை வழங்கினார்கள் எனவும், பொலிசாரின் நீதிமன்றத் தடையுத்தரவினைப் பெற்றதும் நீதிமன்றத்தின் கட்டளைக்கு மதிப்பளித்து ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வை நிறுத்தியும் பொலிசார் நகுலேசைக் கைது செய்திருப்பதானது அவர்களே நீதிமன்றக் கட்டளையை மீறி நடக்கும் செயற்பாடு எனவும் அவர் தனது குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

தனது கணவருக்கு வழங்கப்பட்ட தடையுத்தரவில் நிகழ்வு தொடர்பில் அன்றைய தினம் பிற்பகல் 01.30 மணிக்கு நீதிமன்றில் முன்னிலையாகி தங்கள் தரப்பு விளக்கத்தினை வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தும், அதனையும் பொருட்படுத்தாது பொலிசார் திடீரென எதுவித குற்றச்சாட்டுகளும் இன்றி அவரை வாக்கு மூலம் வழங்க வேண்டும் என்ற பெயரில் அழைத்துச் சென்று கைது செய்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் அவரை விளக்கமறியலில் வைத்திருப்பதானது மனித உரிமை மீறும் செயற்பாடு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முறைப்பாட்டின் பின்னர், இந்த விடயத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி தனது கணவரின் விடுதலைக்கு உதவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## புலிகள் பாணியில் உடை விசாரணைகள் தீவிரம்!

கோப்பாயில் நடந்த மாவீரர் நினைவேந்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் போராளிகளின் உடை போன்ற உடை சிறுவர்களுக்கு அணிவிக்கப்பட்டிருந்தமை தொடர்பாக, குறித்த சிறுவர்களின் பெற்றோர் 6பேர் அழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, கலாசாலை வீதி மற்றும் உரும்பிராய் மேற்கை வதிவிடமாகக் கொண்டவர் களுக்கே அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டு விசாரணைக்கு உட்படுத் தப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்று கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



## வடக்கில் தீவிரமாகும் எய்ட்ஸ்...

யாழ்ப்பாணத்தில் அதிகரித் போதைப் பாவனையால், எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கலாம் என வடபிராந்திய பாலியல் நோய் தடுப்பு சிகிச்சை நிலைய மருத்துவ நிபுணர் மருத்துவர் ஏ.றொகான் தெரிவித்துள்ளார்

வடக்கு மாகாணத்தில் எய்ட்ஸ் தொற்று பரவிவரும் நிலையில், வவுனியாவில் இவ்வருடம் புதிதாக இருவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என்றும், இதுவரை 21பேர் தொற்றாளர்களாக உள்ளனர் என்றும் வவுனியா பொதுமருத்துவமனையின் பாலியல் நோய் தடுப்புப் பிரிவின் பொறுப் பதிகாரி மருத்துவ கலாநிதி திருமதி அருள்மொழி பாஸ்கரன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

யாழ்ப்பாணத்தில் தற்போது பெருமள வான போதைப்பொருள் பாவனையாளர் கள் இரத்த நாளங்களின் ஊடாக உடலில் போதைப்பொருளை ஏற்றிக் கொள்கின்றார்கள். அதனால் எய்ட்ஸ் போன்ற தொற்றுநோய் பரவும் அபாயமும் காணப்படுகிறது. போதைப்பொருளை இரத்த நாளத்தில் ஏற்றுவதற்காக ஒருவர் பாவித்த அதே ஊசியை இன்னொருவர் பாவிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இவ்வாறு பாவிக்கும்போது, ஒருவருக்கு எய்ட்ஸ் தொற்று இருந்தால் மற்றையவருக்கும் அந்தத் தொற்று பரவக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

இலங்கையில் தற்போது 5 ஆயிரத்து 500 பேர் எய்ட்ஸ் தொற்றாளர்களாக உள்ளனர். வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 90 பேருக்கு எய்ட்ஸ் தொற்றுள்ளது. இவர்களில் யாழ்ப்பா ணத்தில் மட்டும் 65 பேர் வசிக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதி கரித்துச்செல்கின்றது. யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் மூவர் புதிய தொற்றாளர் களாக அவதானிக் கப்பட்டனர். இந்த வருடம் நால்வர் புதிய தொற்றாளர்களாக அவதானிக்கப்பட்டுள் ளனர் என்றார்.

## துவாரகா பெயரில்...

குடும்பத்தினரையும் உலகத் தமிழ் மக்கள் தங்கள் இதயங்களில் அன்போடும், மதிப்போடும் வைத்திருக் கின்றார்கள். எனவேதான் அவரது மகளாக வேறு ஒருவரை முன்வைப் பது எங்கள் உள்ளங்களில் பெரும் வேதனையை ஏற்படுத்து கின்றது.

பொதுவெளியிலும், பொதுத்தளத் திலும் தமிழ்மக்கள் இவ்விடயத்தினை நிராகரித்திருந்தமை நம்பிக்கையினை தந்துள்ளதோடு, தகுந்த பதிலடியா கவும் அமைந்துள்ளது.

இதேவேளை இவ்விவகாரத்தினை பேசுபொருளாக கொண்டு கையாளு கின்ற சமூக ஊடகங்களை பொறுப் புணர்வுடன் நடந்து கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

“விழிப்பே அரசியலின் முதற்படி“ என்ற தமிழீழத் தேசியத் தலைவரது வாக்கை நாம் அனைவரும் நினை விருத்தி, தொடர்ந்தும் விழிப்புடன் செயற்படுவோம்.

## முள்ளிவாய்க்கால் பேரழிவை...

தற்போதைய ஜனாதிபதியும் விதிவிலக்கல்ல.

2009 முள்ளிவாய்க்கால் இனப்படு கொலையை சிங்கள ஆட்சியாளர்கள் குறிப்பாக ராஜபக்சக்களும் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தடுத்து நிறுத்தியிருந்தால் பூகோள நலன் சார்பு நாடுகளின் அரசியல் அதிகாரப் போட்டி இன்று இலங்கைத் தீவில் தீவிரம் பெற்றிருக்காது ஆனால் தற்போதைய தீவிரப் போக்கு கூர்மை அடையுமாக இருந்தால் ஜனாதிபதி கூறும் அபாயம் தென்னிலங்கையில் தான் மையங் கொள்ள இருக்கிறது.

2009 இற்கு முன்னர் இந்தியாவின் தென்கடல் பிராந்தியம் மிக பாதுகாப்பாக இருந்தது காரணம் இலங்கையின் வடக்கு ,கிழக்கு மாகாணங்களில் பலமான கடற்படைக் கட்டுமானத்தை விடுதலைப் புலிகள் வைத்திருந்தமை அத்துடன் பூகோள நாடுகளின் அதிகாரப் போட்டியும் கூர்மையடையாது வரையறுக்கப்பட்டதாக இருந்திருக்கும் இவையாவும் தலைகீழாக மாறுவதற்கு முள்ளிவாய்க்கால் பேரவலமும் விடுதலைப் புலிகளின் மௌனிப்பும் காரணமானாது.

தற்போது பிராந்திய அரசியல் அதிகாரப் போட்டியும் பூகோள நாடுகளின் ஆதிக்கமும் அதிகரித்தமைக்கு மிகப் பிரதான காரணம் ஈழத் தமிழர்களின் அரசியல் அதிகாரப் பிரச்சனை தான் எனவே சிறிலங்கா ஆட்சியாளர் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் தென்னிலங்கைக்கான அபாயத்தை நிறுத்த இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண்பதே உசிதம் ஆனால் அவ்வாறான மாற்றம் சிங்கள ஆட்சியாளர் இடையே ஏற்பட்டால் அதிசயமாகவே இருக்கும்

இலங்கைத் தீவில் மையம் கொண்டுள்ள பிராந்திய மற்றும் பூகோள நாடுகள் தங்களின் நலன்களை முன்னுரிமைப்படுத்தி சிங்கள ஆட்சியாளரை முழுமையாக கையாளவே முயற்சிக்கின்றனர் அதுவே ஆட்சி மாற்றங்களுக்கும் ஸ்திரம் அற்ற ஆட்சிக்கும் வழி வகுக்கின்றது.

தமிழர் தரப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை பெற்றுக் கொள்வதற்கான பேரப்பலம் விடுதலைப் புலிகளிடம் மாத்திர இருந்தது துரதிஸ்ட வசமாக தனி நாட்டுக் கோரிக்கையில் ஒரு படி இறங்கி சமஸ்டி தீர்வை பெற்றுவதற்கு பச்சைக் கொடியை காட்ட தாமதித்தமையால் மௌனிப்புக்கு வழி வகுத்தது அன்று சமஸ்டி தீர்வை பெற்றிருந்தால் இன்று தனி நாட்டிற்கான பொது வாக்கெடுப்பில் வெற்றி பெற்றிருக்கலாம்.

தற்போது தமிழர் தரப்பில் மிதவாத தலைமைகளும் ஏனைய தரப்புக்களும் சிங்கள ஆட்சியாளர்களையும் பூகோள அரசியல் அதிகாரத் தரப்புக்களையும் கையாள முடியாத இராஜதந்திரம் அற்ற வெற்று வேட்டுகளாகவே உள்ளனர் உண்மையில் இலங்கை மீது மையம் கொண்டுள்ள பூகோள அதிகாரப் போட்டிக்கு சிங்கள ஆட்சியாளர் தான் காரணம் என்றால் இந்தப் போட்டிக்குள் தமிழர்களுக்கான அதிகாரங்களை பெறுவதற்கான சாதக நிலமைகள் இருக்கின்ற போதும் அந்த பூகோள அரசியலை தமிழர் தரப்பு கையாள வில்லை.

# ஆளுமை உருவாக்கத்தில் வாசிப்பின் வகிபாகம்

ஆளுமை என்பது ஒருவரது கட்டமைப் பில் ஒழுக்க பணிவு அவற்றை தோற்று விக்கும் அணுகுமுறை, நடத்தைகள், சிந்தனைகளை குறித்து நிற்கின்றது அதாவது அவரச சூழ்நிலைக்குள் நேர்த்தியான முடிவெடுக்கும் ஆற்றலுக்கு பெரிதும் பங்காற்றும் வாசிப்பின் வகிபாகம்.

பர்சனாலிட்டி என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இச்சொல் முகமூடி, மறைப்பு எனும் பொருள் கொண்ட பர்சொனே என்ற இலத்தீன் சொல்லில் இருந்து வந்தது. ஆகவே ஆளுமை என்பது ஒருவரின் முகமூடி என்ற கருத்தை கொண்டது. ஆளுமைத் தன்மையின் சில இயல்புகள் நடத்தை காண்பிக்கும் அதாவது ஒழுங்கு, சீரத்தன்மை, உளவியல் உருவாக்கம் சூழலுக்கேற்ப நடப்பது மட்டுமல்லாது ஒரு நெறிமுறையில் நடப்பதையும் குறித்து நிற்கின்றது.

நாம் வாழும் சமூக சூழலும் ஆளுமையை வளர்ப்பதில் பங்கு வகிக்கிறது. கிராமத்தில் படிக்கிற மாணவனுக்கும் நகரத்தில் வசிக்கும் மாணவனுக்கு மிடையே பெரும் வித்தியாசமே இருக்கிறது. கிராமச்சூழலும் நகரச் சூழலும் ஆளுமையின் அடிப்படைகளில் ஒன்று.வாளின் கூர்மையும் நூலினுடைய கூர்மையும் நாட்டை ஆழ்கின்றது. அந்த வகையில் காலப்போக்கில் வாளின் கூர்மை முனை தேய்ந்து விடுகிறது நூலின் கூர்மை மேல்நோக்கி நிற்கின்றது. நிறைய பட்டங்களில் பெயரை அலங்கரிப்பதை காட்டிலும் நிறைய புத்தங்களை வாசித்து மனதை அலங்கரிப்பதன் மூலம் ஆளுமையின் அடையாளம் வேரிருண்டி நிற்கின்றது. உதாரணமாக உறங்கின்ற இடத்தில் கூட படிக்கின்ற இடம் வேண்டும் என கேட்டார் அம்பேத்கார், முப்பத்தைந்து ஆண்டு காலம் நூலகத்தில் மூழ்கி மூலதனம் நூலை கார்ல் மார்க்ஸ் எழுதினார் இன்றும் வேததாந்தமாக கருதப்படுகிறது. ஆளுமைத்திறனுக்கு வாய்ப்பு கிடைப்பது வாசிப்பின் வெளிப்பாட்டு தன்மை நடத்தை பங்காற்றுகின்றது. எப்படிப்பட்ட நவீன வாகனத்தில் சென்றாய்? என்பது முக்கியமல்ல எத்தனை புத்தகங்களை வாசித்து தரமேற்றிக்கொண்டாய் என்பது முக்கியமாகிறது.

அணிகலன்களும் அலங்காரமும் அகந்தை ஆளுமை ஆகாது இதற்கு உதாரணமாக மகாத்மா காந்தி, அப்துல்கலாம், நெலசன் மண்டாலே போன்றவர்களை கூறலாம். இவ்வாறான வாசிப்பின் சிந்தனை மூலம் மக்களாட்சி என்பது மக்களால் மக்களுக்காக மக்களாலே நடத்தப்படும் ஆட்சி என்று முழக்கமிட்ட ஆபிரகாம் லிங்கனின் ஆளுமையும், பழமைவாதிகளின் தாக்குதலுக்கு ஆளாகியும் பெண்குழந் தைகளின் கல்வி உரிமைக்காக போராடி நோபல்பரிசு பெற்ற பாகிஸ்தான் மலாலாவின் ஆளுமையும், சாதாரண அன்னையாக இல்லாமல் தள்ளாத வயதிலும் தத்தி தத்தி நடந்து மதங்களை கடந்து உலக மக்கள் அனைவரது மனங்களிலும் கருணையின் உருவமாக விளங்கும் மறைந்த அன்னை தெரசாவின் ஆளுமையும் வெவ்வேறா னவை. ஆளுமை உருவாக்கத்திற்கு வாழும் இடம் ஒரு காரணம் என்றாலும் நாம் எப்படிப்பட்ட புத்தகங்கள் மூலம் மாற்றிக்கொண்டோம் என்பதில் வாசிப்பின் நேசிப்பு ஈர்க்கின்றது. நடுத்தர நெசவாளர் குடும்பத்தில் பிறந்த அண்ணா மேடையில் முழங்குவதில் சிறந்த விளங்கவும்.தமிழக முதல் வரானதும், ஆங்கிலேயருக்கு நிகராக பேசவதற்கும், வாசிப்பின் புலமை பெற்றதும் ஆளுமை காரணமாகிறது.

நேரத்தை நிர்வகிப்பதன் மூலம் மேம்படுத் தப்பட்ட தகவல் தொடர்பு திறன் மற்றும் வாசிப்புப் பழக்கத்தைப் பெறுவதன் மூலம் நீங்கள் சிறந்த தகவல் தொடர்புத் திறனை வளர்த்துக் கொள்வது என்பது தெளிவாகிறது. நீங்கள் ஒரு நம்பிக் கையான ஆளுமை மற்றும் உங்களை சரளமாக வெளிப்படுத்த முடியும் எழுத்து மற்றும் வாய்மொழி இரண்டும் செல் வாக்கு செலுத்துகிறது.

ஒரு மனிதன் தான் வேலை செய்யும் இடத்தில் திறன்பட செயற்படுத்து வதற்கும் வினைதிறனுடன் வேலை செய்வதற்கும் வாசிப்பு அவசியம். தற்கால உலகத்தில் திறமையாகத் தொழிற்படுவதற்கு வாசிப்பு ஒரு அடிப்படை தேவையாகும். இவ்வடிப் படைத் திறனில்லாவிடின் விரக்தி, கோபம், பயம் போன்ற உளரீதியான பாதிப்புகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. சிறந்த உள விருத்திற்கு ஆளுமை அடையும் திருப்திக்கும் வாசிப்பு அவசியமாகிறது.தொழிலின் உயர்நிலை பெறுவதற்கும் வாசிப்பு பழக்கம் உறுதுணையாக இருக்கும்.

குறைந்த வாசிப்புத்திறனுள்ளவர்களால் ஒரு விடயத்தை கிரகிப்பதற்கும் ஓர் அறிக்கை செய்தியை வாசித்து விளக்குவதற்கும், பதிலளிப்பதற்கும் அதிக நேரத்தை செலவிட வேண்டி ஏற்படும். போதிய வாசிப்பும் கிரகித்தலும் இல்லையென்றால் அடைவு மட்டம் குறைவாக இருக்கும். புதிய விடயங்கள், புதிய கண்டுபிடிப்புகள் பற்றி அறிந்து கொள்ள வாசிப்பு இன்றியமையாதது.

விஷேடமாக வாசிப்பதன் மூலம் பல நன்மைகள் பெறலாம். மொழித்திறன் விருத்தி, சொல்வன்மை, சொல்லாட்சி என்பன விருத்தியடைகின்றது.ஆளுமை உருவாக்கத்தில் வழிவகுக்கின்றது. வாசிப்பின் மூலம் சிறுபிள்ளைகளுடைய மொழித்திறன் விருத்தியும், கேட்டல் திறனும் அதிகரிக்கின்றது அவதானித்து கேட்டல் குறைவாகவுள்ளவர்கள் தொழிலும் பலவற்றை இழக்க வேண்டி ஏற்படும். ஏனையவர்கள் தொடர்பு கொள்ள அல்லது எடுத்துக்காட்ட முனையும் விடயம் என்ன என்பதை சிறந்த வாசிப்புத்திறனுள்ளவர்களால் இலகுவாக விளங்கிகொள்வார்கள்.

பொது அறிவு வளர்ச்சியும் ஏனையவர் களின் கலாச்சாரம், பாரம்பரியம் என்பவற்றை அறியும் வாய்ப்பும் கிடைக்கின்றது. தன்னம்பிக்கை, ஞாபக சக்தி அதிகரிப்பு, கிரகித்தல் திறன் என்பதை காட்டிலும் ஆளுமை உருவாக் கத்திலும் அதிகரிக்கின்றது. பிள்ளைகள் எழுத்துப்பிழையின்றி எழுத்துப் பிழையின்றி எழுதுவதற்கு வாசிப்பு உதவுகின்றது. தர்க்க சிந்தனையும் விருத்தியடைகின்றது. அத்துடன் பிள்ளைகளிலுடைய கற்பனைத்திறனும் அதிகரிக்கின்றது. வாசிப்பின் மூலம் ஒரு மனிதன் எல்லா மூலை முடுக்குகளுக்கும் போய் வரலாம்.


ஒரு அரசனாக ஒரு வீரனாக ஒரு நடினாக என்று எல்லா வகையான பாத்திரங்களுக்குள்ளேயும் சென்று மகிழ்ச்சியடையலாம். வாசிப்பின் மூலம் சிறந்த ஆக்கத்திறன் கொண்ட பிள்ளையை உருவாக்க முடியும். தன்னைப்பற்றி ஒரு நல்ல மதிப்பை அல்லது கௌரவத்தை உருவாக்கு வதற்கு அடிப்படையாக அமைவது வாசிப்புத்தான், தான் முடியும் என்ற தன்னம்பிக்கை அதிகமாகின்றது. குறை வாக வாசிப்பவர்களுக்கு அபிப்பிராயங் களிலும், திறமைகளிலும் நம்பிக்கை இழந்தவர்களாக இருப்பார். மனிதன் வாசிப்பு மூலம் தொழிலும் வாழ்க்கையி லும் உச்ச பயன் அடைந்து கொள்ள முடியும் என்பதற்கு ஆளுமை உருவாக்கம் ஏதுவாக அமைகின்றது.

✍ மபாஸ்

# கவிதையே உயிர் மூச்சாகிய புதுவை இரத்தினதுரை:

## எக்காலத்திலும் எங்களுக்கான குரல் ! விடுதலை வீரத்தின் வீரியக் குரல் !

**( ஈழ விடுதலைக்காக ஒவ்வொரு தமிழ னிடமும் கவிதை மூலமாக உணர்வூட்டினார் புதுவை இரத்தினதுரை. மனித நேயமுள்ள உலகத்து மனிதர்களிடம் உரத்து கூவினார். நெஞ்சு வெடித்து இனத்துக்காகக் கதறிய புதுவை போர் மௌனித்த 2009 மே19 பின்னர் காணாமல் ஆக்கப்பட்டார். எங்கள் மக்களுக்காக ஓங்கி ஒலித்த இந்த கவிஞனுக்கு என்ன சொல்ல போகிறது இந்த உலகம் ? டிசம்பர் 3ம் திகதி ஈழப் பெருங்கவி புதுவை இரத்தினதுரையின் பிறந்த நாளையோட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.)**




புதவை இரத்தினதுரையின் படைப் பிலக்கியம் ஈழ விடுதலைப் போராட் டத்திற்கு ஒரு உந்துசக் தியாக இருந்ததை மறுதலிக்க முடியாது. சுதந்திர கவிதை உலகில் போர்க் கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த பெருமை அவரைச் சாரும்.

உண்மையில் விடுதலைப்போரின் வரலாற்றுடன் சேர்ந்து அவரது கவிதைகளும் சமாந்திரமாகவே பயணித்துள்ளன எனலாம்.

கனதியான கவிதை வீச்சும், உயிர் மூச்சுமான அவரது படைப்புக்களுக்கு ஈழ விடுதலைப்போரில் தனியானதோர் இடமுண்டு. ஈழ விடுதலைப் போராடடம் போரியலில் முனைப்புப் பெற்ற 1987க்கு முந்திய காலத்தில் அவரது கவிதைகள் ஒரு தேசம் என்ற கருத்தின் வலிமையை உரைத்தன. அவையே எம் தேசியத்து எழுச்சியின் நம்பிக்கையை எடுத்துக் கூறின.

**விடுதலைப் போர்க்கவி புதுவை :**

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் விடுதலைக்காக கவிஞர் புதுவை இரத்தினதுரை, போராட்டத்தில் பங்கேற்று புரட்சிப் பாக்களை எழுதி இளைஞர்களை எழுச்சிகொள்ள செய்தவர். கவிஞர் புதுவையின் ஆழ வரிகளை ஒரு முறை உணர்ந்து பார்ததோமானால்

**இழந்து போனவனுக்கு**
**வாழ்க்கை துயரம்.**
**எழுந்து நடப்பவனுக்கு**
**எல்லாமே மதுரம்.**
**துயரம் அழுவதற்காக**
**அல்ல. எழுவதற்காக.**
**எனத் தைரியம் மேலோங்கும்.**

**புத்தூரில் மலர்ந்த புதுவை :**

புதுவை இரத்தினதுரை என அழைக் கப்படும் வரதலிங்கம் இரத்தினதுரை புத்தூரில் 1948 திசம்பர் 3 பிறந்தார். ஈழத்துக் கவிஞரும், பாடலாசிரியரும், சிறப்பக் கலைஞரும் ஆவார். ஏராளமான தமிழ்த் தேசியப் புரட்சிப் பாடல்களை எழுதியுள்ளார்.


14வது வயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கிய இவர் வியாசன், மாலிகா என்ற புனைபெயர்களிலும் பல கவிதைகள் எழுதியுள்ளார். இவர் எழுதிய இந்த மண் எங்களின் சொந்த மண் பலரது வரவேற்பையும் பெற்ற உணர்வு பூர்வமான பாடல் ஆகும்.

புதுவை இரத்தினதுரை எழுதிய வானம் சிவக்கிறது (1970), இரத்த பு்'பங்கள்(1980), ஒரு தோழனின் காதற் கடிதம், நினைவழியா நாட்கள் , உலைக்களம் , பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் ஆகியன வெளிவந்த கவிதைத் தொகுப்புகள் ஆகும்.

**களத்தில் நின்ற கவிஞர் :**

ஒரு படைப்பாளி தன் சொந்த அனுபவங்களில் உயிர் வாழ்கிறான். படைப்பாளியின் சுய அனுபவம் அதில் தங்கியிருக்கிற போது படைப்பு உயிர்ப்போடு நிற்கும். ஒவ்வொரு படைப்பாளிக்கும் அவரவர் வாழ்வியல் சார்ந்து அனுபவம் ஒவ்வொரு வகையாய் அமையும். அவ்வாறே புதுவையின் வரிகளில்..

**வெடிக்கும் எதிரிகணைகள்**
**ஒவ்வொன்றுக்கும்..**
**விரல்மடித்துக் கணக்கெடுத்தபடி**
**இருந்தேன்.**
**இடையிற் கண்ணயர்ந்து**
**போனேன்.**
**விழிப்புற்ற போதும்**
**வந்து வெடித்தன**
**குண்டுகள்..**
**மீண்டும் எண்ணத்**
**தொடங்கினேன்.**
**இடையிற் சிரிப்பு வந்தது.**
**சிரித்தேன..**
**விளையாட்டாகிவிட்டது**
**யுத்தம்...**
**அப்பாடா விடிந்து**
**வருகிறது..**
**இரவு எத்தனை**
**குண்டுகள்**
**என்றாள் மனைவி...**
**எழுந்தமானத்தில்**
**எழுபது என்றேன்.**
**நேற்று என்பது**
**ஏன் பத்துக் குறைந்தது**
**என்றாள்..,**
**நெடுங்கேணியில்தான்**
**நிற்கிறான் கேட்டுப் பார்**
**கேட்காமலா விடுவோம்?**




என களத்தில் உணர்வோடு நின்ற கவிஞர் அவர். கவிதை எழுத ஆரம்பித்தது தொட்டு இன்று வரை. அவரது பாடு பொருளில் பெருமளவு மாற்றமில்லை. மானுடம் எங்கு வதைபடுகிறதோ, அங்கெல்லாம் அவர்களுடைய மொழியில் அவரது கவிதை பேசும்.

வதைபடுதல் ஒவ்வொரு இடத்தும் ஒவ்வொரு வகையாக வெளிப்படும் என்பது தவிர வேறொன்றுமில்லை.

**விடுதலைப் பாதையில் இணைவு :**

தனது பதினான்காவது வயதில் கவிதை எழுத தொடங்கி, முப்பத் தேழாவது வயதில் விடுதலைப் பாதையில் தன்னை இணைத்துக் கொண்டு தீவிரமாக செயல்பட்டவர். போரியல் வாழ்க்கையின் மீதான அதி உன்னதமான நம்பிக்கைகளையும், அழகியலையும் தரும் உக்கிரமான கவிதைகளை எழுதிய கவிஞர் புதுவை இரத்தினதுரை

**அட மானுடனே!**
**தாயகத்தைக் காதலிக்கக்**
**கற்றுக்கொள்.**
**பெற்ற தாய் சுமந்தது**
**பத்து மாதம்**
**நிலம் சுமப்பதோ**
**நீண்ட காலம்.**
**அன்னை மடியில்**
**இருந்து கீழிறங்கி**
**அடுத்த அடியை**
**நீ வைத்தது**
**தாயகத்தின்**
**நெஞ்சில்தானே..**
**இறுதியில் புதைந்தோ**
**அல்லது எரிந்தோ**
**எருவாவதும்**
**தாய்நிலத்தின்**
**மடியில்தானே.**
**நிலமிழந்து போனால்**
**பலமிழந்து போகும்.**
**பலமிழந்து போனால்**
**இனம் அழிந்து போகும்...**
**ஆதலால் மானுடனே!**
**தாய்நிலத்தைக்**
**காதலிக்கக் கற்றுக் கொள்.**

இத்தகைய மகத்தான சொற்களை வடித்து உணர்ச்சிகர கவிதையாக எழுதியவர் புதுவை.

நீண்ட விடுதலைப் பயணத்தில் கடந்து வந்த பாதையின் வீரமும், சோகமும், கோபமும், மகிழ்ச்சியும், பெருமிதமுமென மாறி மாறிய உணர்வுகளைக் கொண்ட காலங் களைக் கடந்து வந்துள்ளார் பெருங்கவி புதுவை.

**கடைசி வரை ஓயாத கவிஞன் :**

அந்தக்கால உணர்வுகளின் குரலாக புதுவையின் படைப்புக்கள் பதிவு பெற்றுள்ளன. புதுவை இரத்தினதுரை கவிதைகள், பாடல்கள் பற்றி எம்முள்ளே பேசப்படும் வேளைகளில் காலத்தின் குரல்கள் என்றே அவற்றை கூறலாம்.

கவிஞர் இணைத்துக் கொண்ட இல்டசிய வாழ்வும் அவரது படைப்புக்களில் சேர்ந்துள்ளது. இதனாலேயே அவரை காலத்தின் குரலாகப் பேசும். கவிஞராக ஆக்கியது எனலாம். புதுவை இரத்தினதுரையின் அற்புதமான கவி ஆற்றலும், அனாசயமான சொல் வளமும் அவரை பெரும் கவிஞர் களது வரிசையில் சேர்த்துள்ளது.




**இந்த மண் எங்களின்**
**சொந்த மண் இதன்**
**எல்லைகள் மீறி**
**யார் வந்தவன்.**
**நிலைகள் தளர்ந்து**
**தலைகள் குனிந்து**
**நின்றது போதும்**
**தமிழா உந்தன்**
**கலைகள் அழிந்து**
**கவலை மிகுந்து**
**கண்டது போதும்**
**தமிழா இன்னும்**
**உயிரை நினைத்து**
**உடலை சுமந்து**
**ஓடவா போகிறாய்**
**தமிழா.**

என நெருப்பாக தொடங்கி நீளும் ஒரு பாடல் புதுவை இரத்தினதுரை உணர்ச்சி பொங்க எழுதியுள்ளார். அந்த பாடல் வரிகள் பாரிய தாக்கத்தை மக்கள் மனத்தில் ஏற்படுத்தியது

வியட்நாம் போராட்டம் நிகழ்ந்த போது, ஒரு வியட்நாமியனாக அவர் கவிதை உணரச் செய்தது. சிலியில் அதிபர் ஆலண்டே கொல்லப்பட்ட போது, சிலிக் குடிமகனாக அவரது கவிதை கோபம் கொண்டெழுந்தது. 1971ஆம் ஆண்டில் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்ட போது, அவர்களுடன் சேர்ந்து அவரது கவிதை அழுதது. யாழ்ப்பாணத்தில் சாதி ஒழிப்புப் போராட்டம் நடைபெற்ற போது, அந்தப் போராட்ட சக்தி களோடு இணைந்து அவருடைய குரல் ஒலித்தது. இப்படி களமாடு வதிலும், கவிதையாடுவதிலும் புதுவை கடைசி வரை ஓயவில்லை.

**தமிழ் இனத்தின் குரல் :**

தமிழ் இனத்தின் சார்பாக புதவை யின் குரல் எப்போதும் கேட்டது. அவருடைய காலக் கவிதைகள் எப்போதும் சூடு தணியாமல் உணர்வை வைத்திருந்தன. இக்க விஞன் கூறியது போல இந்தப் போராட்டத்துக்கு என்னை ஒப்புக் கொடுத்திருக்கின்றேன். இந்தப் பணி முற்றுப் பெறும் போது, வேறு எங்கு வரை துயரக்குரல் கேட்கிறதோ, என்னுடைய கவிதைகளுமாக நான் அங்கு போய்ச் சேருவேன் என வியாசிக்கின்றார்.



மிகுதி 08 ஆம் பக்கத்தில்...

# புற்று நோயும் சித்த மருத்துவமும்





டாக்டர் .வெற்றிவேல் சக்திவேல்,
(BSMS PG Dip Public Adm MSc)
மூலிகை சுகவாழ்வு நிலையம்,
தெல்லிப்பழை

தொன்மையான சித்தமருத்துவ நூல்களில் புற்று நோய் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளன. சித்த மருத்துவ நூல்களில் புற்று என்று பல்வேறு புற்று நோய்கள் அவற்றின் சிகிச்சை முறைகள்,புற்று ஏற்படாமல் தடுக்கும் முறைகள் கூறப்பட்டுள்ளன.ஆயுள் வேதம் அற்புதம் எனக் கட்டிகள் பற்றி குறிப்பிடுவதைக் காணலாம்.

சித்த மருத்துவத்தில் புற்று நோயானது லிங்கப்புற்று, யோனிப்புற்று, தனப் புற்று,அண்டப்புற்று, குடற் புற்று,உச் சிப்புற்று,கன்னப் புற்று, தந்தப் புற்று, நேத்திரப்புற்று, நாக்குப்புற்று,குடற் புற்று, முகப் புற்று, தொண்டைப்புற்று ஆசனப் புற்று, என பதினெட்டுபெயர்களில் குறிப்பிடபடுவதை காணலாம். யூகி வைத்திய சிந்தாமணி,புலிப்பாணி500, அகத்திய வைத்திய காண்டம், அணுபோக வைத்திய நவநீதம், அகத்திய வைத்திய வல்லாதி 600, அணுபோக வைத்திய பிரம்ம ரகசியம் போன்ற நூல்களில் புற்று நோய் பற்றி குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். புற்று நோய்ப்பற்றி ஈழத்து சித்த மருத்துவ நூலான சொக்கநாத தன்வந்திரியம் குறிப்பிடுவதைக் காணலாம். சித்தமருத் துவம் புற்றுநோய் வராமல் தடுப்பதில் பல்வேறு முறையில் பங்காற்றுகின்றது.

**1. சித்த மருத்துவ மூலிகைகள்**
**2. சித்த மருந்துகள்**
**3. சைவ மூலிகை உணவு முறைகள்**
**4. பிராணாயாமம், யோக, தியான முறைகள்**
**5. சைவத்தமிழ்ஆலய வழிபாட்டு முறைகளும்**

சித்தமருத்துவம் கூறும் வாழ்வியல் முறைகளும் நோய் வராமல் தடுக் கின்றன. சித்த மருத்துவ மூலிகைகள் ஒட்சினெதிரிகளாக (Nutritional Anti oxidants) காணப்படுகின்றன. புற்று நோய் நிலையில் வாத ஐயம், ஐய வாதம் போன்ற நாடி நடைகள் காணப்படலாம். சதக நாடியில்“ கபத்தில் வாதம் பிரண்டாலும் வாத மையம் பினல் கொண்டாலும் குறியாக மருந்து பலவிதம் செய்தாலும் தூண்டவிடம் விட்டு வுயிர்கடக்குந் தானே” என்று கூறப்படுகின்றது. புற்று நோயில் ஏழு தாதுக்களில் எது தாக்கப்படுகின்றதோ அதற்கேற்ப நாடி நடை காணப்படும்.
மூலிகைகளில் உள்ள இரசாயணப் பொருட்களும் , போசணைப்பதார்த் தங்களும் (Phyto chemicals and phyto nutrients)புற்று நோய்
ஏற்படாமல் தடுப்பதுடன், நோய் நிலையிலும் பயன்படும். கழிவுகள்
உடலில் தங்கி இருக்க விடாது வாந்தி, பேதி போன்ற
தொன்மையான சித்த மருத்துவ அறி வியல் முறைகள் (Ancient Scientific method for detoxification) மூலம் புற்று நோய் ஏற்படாது சித்தமருத் துவ காப்பு முறை அமை கின்றது.

மாறுபாடான உணவு புற்று நோயை உருவாக்கும். மாறுபாட்டில்லா உணவு புற்று நோய்
வருவதைத் தடுக்கும்.முளை கட்டிய தானியங்கள், சிறுதானியங்கள், கைகுத் தல் அரிசி, நவதாணியங்கள், சாப்பிடு வது நன்று.
கறிவேப்பிலையில் ஒட்சினெதிரி ( Anti oxidants) உள்ளது. இவை திசுக்களின் அழிவிலிருந்து பாதுகாக்கும் Free Radi cals உருவாவதையும் தடுக்கும். மஞ்சளில் வயது முதிர் வைத்தடுக்கும்
இரசாயணங்கள்(Anti aging), ஒட்சி னெதிரிகள்(Anti oxidants) இருப்பதால் புற்று நோய்க்கு எதிராகப்பயன் படும். மஞ்சள் மலக்குடல் புற்றுநோய் Colo Rectal Cancer ஏற்படாமல் தடுக்கும்
மாதுளம்பழம் மார்பக புற்று நோயைத் தடுக்கும். இதிலுள்ள எல்லஜீக்கமிலம் எனும் இரசாயணப்பொருளை
புற்று நோய்க்குக்கலங்கள் வளர் வதைக்கட்டுப்படுத்தும். மார்பு கட்டிகள், மார்பு புற்று நோய் வருவதை கொத்த மல்லி தடுக்கும்.

தாய்ப்பால் எதிர்காலத்தில் புற்று நோய் தடுப்பாகவும் அமையும்.மிளகில் புற்று நோய், எயிட்ஸ் போன்றவற்றிற்கான எதிர்ப்புச்சக்தியைக் கொடுக்கும் மூலக் கூறுகள் காணப்படுகின்றன.சில மூலிகை களில் புற்று நோயுக்கு எதிரான இரசா யணங்கள் (Anti cytotoxic properties) காணப்படுகின்றன. தக்காளியில் உள்ள லைக்கோபின் புரஸ் ரெட் புற்று நோயைக்கட்டுப்படுத்தும். மொசு மொசுக்கை நுரையீரல் புற்று வராமல் தடுக்கும் மஞ்சள் இஞ்சி புற்று கலங்களை அழிக்கும். வெங்காயம் புற்றைக்குறைக்கும்.பட்டிப்பூ இரத்த புற்று நோய்க்கு பயன்படும்.அமெரிக்கப் பல்கலைக்கழக ஆய்வின்படி மார்பக புற்றுநோய் தடுப்பதற்கு பாகற்காய்ச் சாறு பயன்படும். ஆடு பல மூலிகை களைச் சாப்பிடுவதால் ஆட்டுப்பால் புற்று வளர்ச்சியைக் கட்டுப்ப டுத்தும். இஞ்சி, உள்ளி புற்றுநோய் வராமல் தடுக்கும். முதல் நாள் சமைத்த உணவு அமுதம் எனினும் அருந்தோம் என நோயனுகா விதி கூறுகின்றது. இரசகெந்தி மெழுகு, வல்லாரை கிருதம், வாலை ரச மெழுகு,மேகசஞ்சிவி தைலம்,சிவனார் அமிர்தம்,வான்மெழுகு, பூரண சந்திரோதயம், இரச பற்பம் நந்திமை பறங்கி கிழங்குப்பற்பம்,தங்க பஸ்பம் , நாத செந்தூரம், இரச பதக்கம், கௌரி பதங்கம்,பஞ்சலோக செந்தூரம் , புற்றுப்பதங்கம் இரச பற்பம், மகா வல்லாதி இடிவல்லாதிபோன்ற சித்த மருத்துவ மருந்துகள நிலைமைக்கு ஏற்ப சித்த மருத்துவர் கண்காணிப்பில் புற்று நோய் சிகிச்சையில் வழங்கப்படு கின்றன, சேராங்கொட்டை, வெண்கொடி வேலி, செங்கொடி வேலி போன்ற மூலிகைகளும் புற்று நோய் சிகிச்சையில் பயன்படுத் தப்படுகின்றன. நெல்லிக் காய், அமுக்கரா, மஞ்சள், உள்ளி

# கவிதையே உயிர் மூச்சாகிய...

**ஊர் பிரிந்தோம்**
**ஏதும் எடுக்கவில்லை**
**அகப்பட்ட**
**கொஞ்சம் அரிசி,**
**பருப்பு, இரண்டு பாய்,**
**இருமல் மருந்து,**
**மனைவியின்**
**மாற்றுடுப்பு மூன்று,**
**காற்றுப் போய்க்கிடந்த**
**மிதிவண்டி,**
**காணியுறுதி,**
**அடையாள அட்டை**
**அவ்வளவே,**
**புறப்பட்டு விட்டோம்.**
**இப்போ உணருகிறேன்**
**உலகில் தாளாத**
**துயரெது?**
**ஊரிழந்து போதல் தான்.**

இந்த கொடூர நிலை அரை நூற் றாண்டாக எங்கள் ஈழமண்ணில் தொடர்ந்தது.

**மானுட விடுதலை வேண்டி :**

தமிழ் இன விடுதலை வேண்டியும்,
அதி உச்ச எல்லையான மானுட விடுதலையை கோரிய கவிஞனை சாதாரணமான இலக்கியக் கோட்பாட்டுக் குள் சுருக்கிவிட இயலாது. ஏனெனில் புதுவை எப்போதும் களமும் கவிதையு மாய் வாழ்ந்தவர்.

போர்க்கால இலக்கியத்திற்கு இலக் கணம் வகுத்த பெருமைக்குரியவரும் புதுவை எனலாம். எங்கள் விடுதலைப் போராட்ட வாழ்வையும், வரலாற்றையும் இலக்கிய இயக்கத்திற்குள் முதன்மைப் படுத்தி தமிழ்த் தேசிய பிரக்ஞையை விழிப்புறச்செய்ய உழைத்தவரும் அவரே.

எங்கள் விடுதலைப்போராட்டம் எதிர்கால மாணவர்களுக்கான ஆய்வுப் பொருளா கும் காலம் வரும். அவ்வேளையில் விடுதலைப் போராட்டம் கடந்துவந்த வரலாற்றுப் பாதையின் போக்கு களையும், இந்த போருடன் வாழ்ந்த மானிடரின் மன உணர்வுகளையும் சொல்லும் ஆய்வுக்கு புதவை யின் கவிதைகளை உசாத்துணையாகும்.

இதனாலேயே இவர் எழுதிய பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார் என்ற ஆன்மிகப் பாடலை கூட இலங்கை இராணுவ 2014 செப்டம்பரில் ஒலிபரப்புவதற்குத் தடை செய்து எதிர்கால வரலாற்றை மூடி மறைக்க ஆதிக்க அரசு எத்தனிக்குறது.

புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் பதுங்குகுழி வாழ்க்கைக்கும், விமானத் தின் குண்டு வீச்சுக்களும், பீரங்கிகளின் எறிகணை வீச்சுக்களும் அவரது கவிதைப் பொருளாயின. போர்க்கால படுகொலை வீச்சுக்கண்டு வெம்பி, வெடித்து கோபம் கொண்டு சாபமிட்டன புதுவை கவிதைகளும் தான். அழுதபடியே சேர்ந்துவந்தன வரிகள். ஆனால் நம்பிக்கை தளராத வரிகளுடன் விடுதலைக்கனவு குலையாத பாடல் களாய் மீள மிளிர்ந்தன.

பொருட்தடை, மருந்துத்தடை, போக்கு வரத்துத்தடையென எல்லாத் தடையி னுள்ளும் கிடந்தழுந்திய எம் மக்களுடன் சேர்ந்திருந்தன துயரத்தை கூறியதும் புதுவையின் கவிதைகள்.
வன்னியினுள்ளே நடந்தேறிய விடுதலை தியாக வேள்வியில் சேர்ந்தொலித்தன அவரது பாடல்களும் தான்.

**சும்மா காற்றில் பற்றியா**
**இந்தத் தீ மூண்டது?**
**இந்த அனல் பிடித்தெரிய**
**எத்தனை காலம் பிடித்தது.**
**எத்தனை பேரைத் தீய்த்து**
**இந்த தீ வளர்த்தோம்.**
**எத்தனை பேரை நெய்யாக**
**வார்த்தோம்...,**
**அணைய விடக்கூடாது**
**ஊதிக்கொண்டேயிரு.**
**பற்றியெரியப் போகுதெனப்**
**பதறுவர்**
**ஊதுவதை நிறுத்தி விடாதே..**
**இந்தத் தீயின்**
**சுவாலையிற்தான்**
**மண் தின்னிகள் மரணிக்கும்...**



இத்தகைய கவிப்படைப்பின் மூலம் ஈழத் தமிழ்மக்களை போராட்ட களத்திற்கு செல்ல வழியமைத்தவர் புதுவை இரத்தினதுரை.

**களத்தில் மலர்ந்தவை பாடல்கள் :**

இராணுவ ஆக்கிரமிப்புக்கு காலத்தில் அவரது பாடல்கள் காடுகளின் கரந்துறை விடுதலை வாழ்வியலுடன் பயணித்தன. அப்போது 1989இல் வெளிவந்த ஒலிநாடாவான களத்தில் மலர்ந்தவை ஈழமெங்கும் எட்டுத் திசையிலும் ஒலித்த பாடல்களாகும்.

அத்தோடை புதுவை எழுதிய பாடல் களில் இந்த மண் எங்களின் சொந்த மண், வேர்கள் வெளியினில் தெரிவ தில்லை, காவலரண் மீது காவலிருக் கின்ற ஆசை மகளே,
பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே,
காலநதி ஓடுகின்ற கரையில் வீசும் காற்று, தீயினில் எரியாத தீபங்களே,
சங்கு முழங்கடா தமிழா என்றும் தமிழர் மனங்களில் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

ஈழ விடுதலைக்காக ஒவ்வொரு தமிழனி டமும் கவிதை மூலமாக உணர்வூட் டினார் புதுவை இரத்தினதுரை. மனித நேயமுள்ள உலகத்து மனிதர்களிடம் உரத்து கூவினார். நெஞ்சு வெடித்து இனத்துக்காகக் கதறிய புதுவையை போர் மௌனித்த 2009 மே19 பின்னர் காணாமல் ஆக்கப்பட்டார். எங்கள் மக்களுக்காக ஓங்கி ஒலித்த இந்த கவிஞனுக்கு என்ன சொல்ல போகிறது இந்த உலகம் ?

மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கும், அவர்களின் விடுதலைக்குமாக, பயணித்து, சர்வ தேசியம். கவிதைப் பயணம் மூலமாக மட்டுமல்ல, களப்பணி யாலும் வளப்படுத்திய பாப்லோ நெருடா, நசீம் இக்மத், வால்ட் விட்மன், பாலஸ்தீனக் கவிஞன் மக்மூத் தார்வீ‘, கருப்பினக் கவிஞன் லாஸ்டன் ஹ்யூஸ் இவர்களின் திசைவழியில் புதுவை இரட்ணதுரையும் பயணிக்கிறார் என்றால் மிகையாகாது.

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# வரலாற்றில் இஸ்ரேலின் இருப்பிடச் சிக்கல் ? யூத தேசம் எங்கெல்லாம் உருவாக இருந்தன ?







[இரண்டாம் போரின் முன்னர் ஐரோப்பாவில் குடிபுகுந்த யூதர்களைக் எப்படி அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது என்பதில் ஒவ்வொரு நாடும் பெரும் ஆலோசனைகளில் ஈடுபட்டனர். வேறிடங்களில் குடியேற்றுவது பற்றி புதிய பல திட்டங்களை வகுத்தனர். அதனைப்பற்றி ஆராயும் வரலாற்றுப் பார்வையே இந்த அலசலாகும்]

ஐரோப்பாவில் யூதர்களைக் கண்டு வெறுப்படைந்த காலம் ஒன்று இருந்தது. குறிப்பாக முதலாம் - இரண்டாம் உலகப் போருக்கு முன்பாகவே இத்தகைய வெறுப்பு யூத மக்கள் மீது இருந்து என பல வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவில் குடிபுகுந்த யூதர்களைக் எப்படி அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது என்பதில் ஒவ்வொரு நாடும் பெரும் ஆலோசனைகளில் ஈடுபட்டனர். வேறிடங்களில் குடியேற்றுவது பற்றி புதிய பல திட்டங்களை வகுத்தனர். அதனைப்பற்றி ஆராயும் வரலாற்றுப் பார்வையே இந்த ஆக்கமாகும்.

### யூதர்களை பூங்கொத்து கொடுத்து வரவேற்ற பாலஸ்தீனர்!

ஐரோப்பாவில் இருந்து வெளியேற்றப்பட்ட யூதர்களை, பாலஸ்தீனியர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்கள். அங்கு பாலஸ்தீனம் சென்று கால்பதித்து மெல்ல மெல்ல அவர்களின் நிலங்களை அபகரித்து இன்றைக்கு பாலஸ்தீனர்கள் 10மூத்திற்கு குறைவான நிலத்தில் வசித்து தங்களின் தாய்நாட்டை இழந்து நிற்கதியாய் இருக்கிறார்கள் என்பது காலக் கொடுமையாகும்.

அப்படி பாலஸ்தீனத்தில் யூத மக்கள் வந்திருக்காவிட்டால், வேறு என்ன திட்டங்கள் எல்லாம் இந்த உலக நாடுகள் அவர்களுக்காக வைத்திருந்தார்கள் என்பதைப் பற்றி ஆராயும் வரலாற்றுப் பார்வையே அலசலே இந்த ஆக்கம்.

### இஸ்ரேலின் இருப்பிடச் சிக்கல் :

பாலஸ்தீனம் என்னும் தேசம் சரித்திர நியாயங்களின் அடிப்படையிலும், அம்மண்ணின் பூர்வீகக் குடிகள் என்கின்ற முறையிலும் பார்த்தால், கண்டிப்பாக அது பாலஸ்தீன அராபியர்களுக்கு உரியதுதான் என கூறினாலும், யூதர்களும் அந்த மண்ணின் பூர்வீகக் குடிகள் தான்.

யூதர்களும் அந்த மண்ணில் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்பே வந்தேறிகளாக வாழ வந்தவர்கள் தான். அராபிய இனம் மத்திய கிழக்கு நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகளான சிரியா, ஜோர்டான்,லெபனான், ஈராக், எகிப்து, ஈரான், சவுதி அரேபியா முழுக்க பரவி இருந்த இனம். அந்த இனம் பாலஸ்தீனிலும் பரவி இருந்தது.

அதனால் பாலஸ்தீன அராபியர்கள், அல்லது பாலஸ்தீன முஸ்லீம்கள் என்று அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் ஒரு காலத்திலும் பாலஸ்தீனை விட்டு வெளியேறியதில்லை.

1948ல் அவர்கள் தேசத்திற்குள், அவர்கள் அனுமதியின்றி ஐ.நா மற்றும் அமெரிக்கா, பிரிட்டன் துணையுடன் இஸ்ரேல் என்னும் தேசம் உருவானதாலும், அதனை முன்னிட்டு நடந்த போர்களினாலும் அகதிகளாக்கப்பட்டு சமீபத்தில் முழுமையாக நாடற்றவர்களாக வெளியேற்றப்பட்ட இனமாகி உள்ளனர்.

### அமெரிக்காவின் யூத நாடு திட்டம்:

யூதர்களுக்கு ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என 1825-ல் அமெரிக்காவின் நியூ யார்க்கில் உள்ள அரசியல்வாதியும் கதாசிரியருமான மோர்டியாக் மேனுவேல் நோஹ் 27 சதுர மைல் பரப்பளவு கொண்ட ஒரு தீவை வாங்கினார். எறாரத் (ARARAT- city of Refuge) என அந்தத் தீவிற்கு பெயர்சூட்டினார்.

இதனை அவர் யூதர்களுக்கான தாய் நாடாக மாற்றத் திட்டமிட்டார்.

அந்தத் தீவில் ஒரு பெரும் கல் வெட்டையும் நிறுவினார். அமெரிக்கா சுதந்திரம் பெற்ற 50வது ஆண்டில் இதை ஒரு சாதனையாக அறிவிக்க அவர் முனைந்தார். ஆனால் இந்த யோசனையை யாரும் செவிமடுக்க வில்லை என்பதால் அவர் திட்டத்தைக் கைவிட்டார். ஆனால் அவர் நிறுவிய கல்வெட்டு இன்றைக்கும் அங்கே உள்ளது.

### உகாண்டாவில் யூத நாடு:

பிரித்தானிய எழுத்தாளர் ஜோசப் சாம்பேர்லென் (Joseph Cham berlain) அவர்களின் காணியாகத் திகழ்ந்த கிழக்கு ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியை யூதர்களுக்கான தாயகமாக மாற்றத் திட்டமிட்டார். இந்தத் திட்டத்தை அவர் 1903-ல் பேசலில் நடைபெற்ற ஆறாவது சர்வதேச யூதர்கள் மாநாட்டில் அறிவித்தார்.

ஐரோப்பா முழுவதும் யூதர்களுக்கு எதிராக பெருகி வரும் எதிர்ப்பலைகளை சுட்டிக்காட்டி இதிலிருந்து தப்பிக்க விரைவில் ஒரு பாதுகாப்பான இடத்தை நாம் தேர்வு செய்தாக வேண்டும் என அவர் வற்புறுத்தினார். இதனை தியோடர் ஹெர்சலே ஒரு தற்காலிகத் தீர்வாக ஒப்புக்கொண்டார். பிரிட்டன் உகாண்டாவில் 5000 சதுர கிலோ மீட்டர் நிலத்தை ஒதுக்கவும் ஒப்புக் கொண்டது.

1904-ல் ஒரு பெரும் குழு இதனை ஆய்வு செய்ய அங்கே பயணித்தது. ஆனால் 1905-ல் ஆப்பிரிக்காவில் ஒரு யூத தாயகத்தை ஏற்படுத்துவது முதல் மாநாட்டின் தீர்மானங்களில் இல்லை என்பதால் இதனை ஏற்க இயலாது என பெரும் எதிர்ப்புகள் கிளம்பின.

### யூதர்கள் ரஷ்யாவுக்கு குடிபெயர்வு :

சிலுவைப்போரில் பின் அமைந்த இஸ்லாமிய பேரரசு அதாவது துருக்கியை தலைமையிடமாக கொண்டு எகிப்து ஈராக் சிரியா ஜோர்டான் லெபனான் ஆகியவற்றை உள்ளடக்கிய ஓட்டோமான் பேரரசு மீண்டும் யூதர்களை மீள் குடியேற்றம் செய்தது.

ஆயினும் அச்சத்தால், பெரும்பாலான யூதர்கள் ரஷ்யாவுக்கு குடிபெயர்ந்தார்கள். ரஷ்யாவுக்கு அதனுடைய அண்டை நாடு லிதுவேனியா எல்லை பிரச்னை இருந்தது. தங்களுக்கென தனி நாடு அமைக்கும் எண்ணத்தில் இருந்த யூதர்கள் அதன் எல்லைப்பகுதி நிலங்களை ரஷ்ய அதிகாரிகளிடம் லஞ்சம் கொடுத்து வாங்கி குவிக்கத் தொடங்கினர்.

அப்போது ரஷ்யப் பேரரசர் அலெக்சாண்டர் II கொல்லப்படவே அது யூதர்களின் சதியாக இருக்கலாம் என்று சந்தேகப்பட்ட ரஷ்ய அதிகாரிகள் யூதர்களை நாட்டை விட்டு விரட்டினார்கள். 150 ஆண்டுகளுக்கு முன் ரஷ்யாவை விட்டு விரட்டப்பட்ட யூதர்களில் பலர் மீண்டும் துருக்கி பேரரசில் குடியேறினார்கள்.

போலந்து,லிதுவேனியா,இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளில் குடியேறியிருந்தார்கள். பெரும்பாலான யூதர்கள் ஜெர்மனியில் குடியேறியிருந்தார்கள். யூதர்களின் நிதி ஆளுமை நடவடிக்கை காரணமாக 50,000 யூதர்கள் லிதுவேனியாவில் கொல்லப்பட்டார்கள்.

### கிழக்கு ரஷ்யாவில் யூத தேசம் ?

யூதர்களின் எண்ணிக்கை படு வேகமாக


4¢ CHICAGO DAILY SUN TIMES FINAL

Its name is Israel

U.S. RECOGNIZES JEWISH STATE

Stories on page 2 and back page

வளர்ந்துவருவதை ரஷ்யா ஒரு நெருக்கடியாகப் பார்த்தது. அதனால் இதனைக் கட்டுப்படுத்த அவர்களுக்கு என்று ஒரு தனித்த நிலப்பகுதியை ஏற்படுத்த அவர்கள் முடிவு செய்தனர்.

ரஷ்யா அங்கே சுயாட்சியுடன் கூடிய ஒரு சோசலிச வாழ்க்கையை அளிக்கலாம் என்றும், ஆனால் தேசிய அளவில் அவர்கள் ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே இருப்பார்கள் என்றும் அறிவித்தது.

கிழக்கு ரஷ்யாவில் சீனாவில் எல்லை அருகில் அவர்களுக்கு ஒரு நிலப்பரப்பையும் அவர்கள் இதற்காக ஒதுக்கினார்கள். இதுதான் பிரோபிச்சான் (Birobi dzhan) பகுதி ஆகும். கடும் குளிர் பிரதேசமாக இந்தப் பகுதி இருந்தது. அங்கே யூதர்கள் மெல்ல மெல்ல குடியேறினார்கள். ஒரு கட்டத்தில் அந்தப் பகுதியில் 16மூ பேர் யூதர்களாக வசித்தார்கள். ஆனால் தட்பவெப்பமும் காலமும் ஒத்துழைக்காததால் மெல்ல மெல்ல அங்கிருந்து பல ஊர்களுக்கு இடம்பெயர்ந்தார்கள்.

### யூதர்களை ஜப்பானில் குடியேற்றம்?

1934-ல் ஜப்பான் மன்னர் ஒரு திட்டத்தை அறிவித்தார். இதற்கு புகு திட்டம் (குரபர ிடயெ) என பெயர் சூட்டினார். யூதர்களை ஜப்பானில் குடியேற்றம் செய்தால் தன் வழியே ஜப்பானிற்கு பொருளாதார ரீதியில் பல நன்மைகள் ஏற்படும் என அவர் நம்பினார்.

6 லட்சம் பேரை குடியேற்றம் செய்யும் அளவிற்கு அவர்கள் பெரும் திட்டங்களை வகுத்தார்கள். ஆனால் யூதர்கள் ஆபத்தானவர்கள் என்கிற பயம் ஜப்பானியர்கள் மத்தியில் கடுமையாக இருந்தது. யூதர்கள் அமெரிக்காவிற்கு ஆதரவாகவே நிற்பார்கள், அது ஜப்பானுக்கு ஆபத்தாகவே முடியும் என்று அரசியல் நிபுணர்கள் தெரிவிக்க இந்தத் திட்டத்தை கைவிட்டார்கள்.

### ஜெர்மனியில் பல லட்சம் யூதர்கள் கொலை :

மிகுதி 11 ஆம் பக்கத்தில்...


THE PALESTINE POST

STATE OF ISRAEL IS BORN

– ஐங்கரன் விக்கினேஸ்வரா



# போலித் துவாரகாவும் பின்னுள்ள மர்மங்களும்



சிறுவயதில் துவாரகா

**“எமக்கு அடிபணிய மறுத்தால் மீண்டும் புலிகளை உருவாக்கி, ஒரு போராட்டத்தைத் தோற்றுவிக்கத் தயங்க மாட்டோம்” என இந்திய அரசு மறைமுகமாக இலங்கை அரசாங்கத்தை எச்சரிக்கை செய்வதற்கான “றோ”வின் நிகழ்ச்சி நிரலாகவும் இது இருக்கலாம்”**



இலங்கையில் கார்த்திகை மாதம் என்பதே பதற்றம் நிறைந்ததுதான். அதற்கு முக்கியமான காரணம் கார்த்திகை - 27 இல் தமிழ்மக்க ளால் நினைவுகூரப்படும் மாவீரர் நாள். தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்காக தம் உயிரை விதையாக்கிய மாவீரர்களை நினைவு கூரும் இவ்வருடக் கார்த்திகை மாதம் ஆரம்பம் முதலே பதற்றம் நிறைந்ததாகவும் தமிழ் மக்கள் மனதில் பல ஐயங்களையும் புதிய கேள்வி களையும் விதைத்த மாதமாகவும் கடந்துள்ளது. மாவீரர்நாளில் வெளியான ஒரு காணொலியே இந்தச் சந்தேகங் களுக்கு மூலகாரணம்.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா உயிருடன் இருப்பதாகவும், அவர் மாவீரர் நாள் உரை நிகழ்த்து வதாகவும் சமூக வலைத்தளங்களில் அந்தக் காணொலி பரவியது. இப்படியொரு காணொலி வர இருப்பதை ஒரு மாதத்துக்கு முன்னரே ஆங்கில. சிங்கள, தமிழ் ஊடகங்கள் எதிர்வு கூறியிருந்தன. கிட்டத்தட்ட பதினொரு நிமிடங்கள் கொண்டதாக அந்தக் காணொலி அமைந்திருந்தது. அதில். தன்னை தலைவர் பிரபாகரனின் மகள் என அடையாளப்படுத்திக் கொள்ளும் ஒரு பெண். விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் குறித்தும் அதைச் சிங்கள அரசு வல்லரசு நாடுகளின் துணை கொண்டு வலுவற்ற தாக்கியதைப் பற்றியும் கூறுகின்றார். அதன் பின்னர் சமகால அரசியல் குறித்து கூறுகையில், அரசியல் போராட்டம் வலுப்பெற தமிழ் மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் என்ற கருத்தை முதன்மைப்படுத் தியிருந்தார். காணொ லியில் தலைவரின் மகள் துவாரகா என அடையாளப்படுத் திக் கொள்ளும் அந்தப்பெண் கூறும் கருத்துகள் யதார்த்தமானவை தான். ஆனால் சிக்கல் என்னவெனில், அவர் கூறிய கருத்துகளை விடவும் மக்கள் மனதில் உருத்திக் கொண்டிருப்பது. ‘அவர் உண்மையில் தலைவரின் மகள் துவாரகா தானா?’ என்ற கேள்வியே.

காரணம் 2009 யுத்தம் முடிவடைந்த பின்னர் தலைவரின் மகளும் மனைவியும் உயிருடன் இருக்கிறார்கள்
என ஒரு தரப்பினர் கூறினர். ஆனால் இன்னொரு தரப்பினரோ ‘அவர்கள் உயிருடன் இல்லை’ என வாதிட்டார்கள். முள்ளிவாய்க்காலின் இறுதிக்காலத்தை மூடியிருந்த புதிர் வாழ்வு, தலைவரின தும், அவர் குடும்பத்தினதும் உண்மை நிலையை எவரும் உறுதிசெய்யமுடியாத அளவுக்கு மாற்றியிருந்தது. இதனா லேயே இப்போது காணொலியில் தோன் றிய பெண் உண்மையில் தலைவரின் மகள் தானா? அல்லது இது தமிழ் இன விரோதிகளால் திட்டமிடப் பட்ட ஒரு நிகழ்ச்சி நிரலில் நடைபெறும் நிகழ்வா ? என்ற கேள்விகள் விஸ்வரூப மெடுத் துள்ளன. இதுவரைகாலமும் வெளிப் படாத தலைவரின் மகள் ஏன் இப்போது வெளிப்படவேண்டும்?

**விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் பலருக்கும் துவாரகாவை நன்கு தெரியும். ஆனால் அவர்கள் கூட “இவர்தான் தலைவரின் மகள் எனக் கூறாமல் மௌனம் காக்கின்றனர். இப்படியான சூழ்நிலையில் காணொலியில் தோன்றிய பெண்ணுக்கே. தலைவரின் மகள் தானேதான் என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.**

தலைவரின் மகள் என்பதைச் சரியான ஆதாரத்துடன் வெளிப்படுத்துவது அவரின் உயிருக்கு அச்சுறுத்தலாக அமையும் என அந்தப் பெண்ணோ அல்லது அவரின் ஆதரவாளர்கள் கூறுவார்களோ எனின் அவர் தலைவரின் மகளாக இருக்கமாட்டார். காரணம் உயிர்ப்பயம் உள்ளவர் நான் தலைவரின் மகள் என வெளிப்படுத்தி இருக்கமாட்ட ார். அத்துடன் உயிர்ப்பயம் உள்ளவர் தலைவரின் மகளாகவும் இருக்கமாட்டார்.

உண்மையில் அவர் தலைவரின் மகள் என்பதை விஞ்ஞானபூர்வ ஆதாரங்க ளுடன் நிரூபிக்க ஏராளம் வழிகள் இருக்கின்றன. அதன்வழியே அவர் துவராகா என தன்னை நிரூபித்தால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட சந்தேகத்தை இல்லாதாக்கலாம்.

கடந்த வருடம் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்ற தகவல் வெளிவந்த நிலையில், இந்த வருடம் அவர் மகள் உயிருடன் இருப்பதாக காணொல வெளியாகி உள்ளது. இந்த நிகழ்ச்சி நிரலின் நோக்கம் என்ன? இதற்குச் சில காரணங்கள் இருக்கலாம்.

இலங்கை அரசு, சிதைவுற்றுக் கிடக்கும் சிங்கள தேசியவாதத்தை உயிர்ப்புறச் செய்வதற்காகவும், இன மோதலைத் தூண்டிவிட்டு இலங்கையில் நிலவும் பொருளாதார ரீதியான பிரச்சினைகளில் இருந்து மக்களைத் திசை திருப் புவதற்கும் இந்தச் செயலைத் திட்டமிட்டு மேற் கொண்டிருக்கலாம். இது ஒரு காரணம். மற்றைய காரணம், எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளின் செயற்ப்பாட்டை யும், அவர்களின் வலையமைப் பின் ஆழம் பற்றி அறிந்து கொள்ளவும் இவ்வாறு பொய்யான பரப்புரைகளை கட்டவிழ்த்து விட்டிருக்கலாம்.

இத்தகைய பொய்ப்பிரசாரம் மூலம் உண்மையான தலைவரின் மகள். வெளிப்படலாம் அல்லது இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் அறிக்கைகளை விட்டு தம்மை அடையாளப்படுத்தினால், அவர்களை இனங்கண்டு ஒழிக்க நினைக்கும் சதியாகவும் இருக்கலாம். சிங்கள அரசாங்கம் திட்டமிட்டு இவ்வாறான போலித் தகவலைப் பரப்பி இருக்குமானால் ஒன்று மட்டும் உண்மை, அரசாங்கத்தில் உள்ள உயர் மட்ட அரசியல்வாதிகளுக்கு தமிழ்மக்கள் மீது மட்டும் அல்ல சிங்கள மக்களின் நலன் சார்ந்தும் அக்கறை இல்லை என்பதே அது. தீவில் அமைதி நிலவுவதையும் அவர்கள்

இலங்கைத் விரும்பவில்லை. தமது சுயநல அரசியலுக்காக அவர்கள் எதையும் செய்வார்கள் என்பதையும் இது காட்டி நிற்கும். இவ்வாறான போலித் தகவல்களை வெளியிடுவதன் மூலம் தமிழ் மக்கள் மனத்தில் விரக்தியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி புலிகள் தொடர்பில் மாறுபட்ட கருத்தியல்களை உருவாக்கமுடியும். இந்தக் கருத்தியல் முரணை அடிப்படையாகக் கொண்டு பின்னாளில் தமிழ் மக்களை பிளவு படுத்தி, தங்களுக்குள் தாங்களே மோதிக் கொள்ளும் நிலைக்குக் கொண்டு செல்வதற்கான நிகழ்ச்சி நிரலாகவும் துவாரகாவின் காணொலி யைக் கொள்ள முடியும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட் டத்தை வழிநடத்த தலைவர் அல்லது தலைவரின் வாரிசுகளால் மட்டுமே முடியும் எனும் நம்பிக்கையை விதைத்து, அவர்களுக்காக தமிழ் மக்களைக் காத்திருக்க வைப்பதன்மூலம் தலைமை அற்ற இனமாக தமிழ் இனத்தை மாற்றும் ஒரு திட்டமாகவும் இது இருக்கலாம்.

எமக்கு அடிபணிய மறுத்தால் மீண்டும் புலிகளை உருவாக்கி, ஒரு போராட் டத்தைத் தோற்றுவிக்கத் தயங்க மாட்டோம்” என இந்திய அரசு மறைமுகமாக இலங்கை அரசாங்கத்தை எச்சரிக்கை செய்வதற்கான “றோ” வின் நிகழ்ச்சி நிரலாகவும் இது இருக்கலாம்.

குறித்த பெண் தலைவர் மக்கள் துவாரகாவா? இல்லையா? என்பதை கடந்து நாம் ஒரு விடயத்தை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் வெற்றி பெற தலைவர் ஒருவர் வெளியில் இருந்து வரவேண்டும் என சிந்திக்காது, எங்களுக்குள் ஒரு தலைவரைத் தேடவேண்டும். எங்களுக்கான தலைவன் என்றோ ஒருநாள் எங்களிடமிருந்தே இருந்தே தோன்றுவான், தலைவர் பிரபாகரனைப் போல.

**நன்றி: எஸ். பிரஜீவன்ராம்**

## ஒதியமலை படுகொலை நினைவேந்தலில் குழப்பம் விளைவித்த பொலிஸார்!

முல்லைத்தீவு- ஒதியமலை படுகொலை நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக் கப்பட்டபோது பொலிஸாரால் குழப்பம் விளைவிக்கப்பட்டுள்ளது. ஒதியமலைப் படுகொலையின் 39 ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று ஒதியமலை சனசமூக நிலைய வளாகத்தில் படுகொலை 19 செய்யப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் உணர்வு பூர்வமாக இடம்பெற்றன.

இந்நிலையில், 39ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி அமைதியாக இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென நுழைந்த ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் ஒலிபெருக்கி பாவிப்பதற்கான அனுமதிப் பத்திரம் பெறவில்லை எனத் தெரிவித்து குழப்பத்தை விளைவித்திருந்தனர்.



இதன்போது அந்த இடத்தில் பாரிய குழப்பநிலை ஏற்பட் டது. திட்டமிட்ட வகையிலே ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி நிகழ்வில் குழப்பத்தை ஏற் படுத்தும் நோக்கோடு செயற் பட்டதாக அங்கிருந்த மக்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 14 ஆண்டுகளாக தாங்கள் நிகழ்வை மேற்கொள்வதாகவும் எந்த பொலிஸாரும் குழப்பத்தை விளைவிக்கவில்லை என்றும் நீங்கள் மட்டும் திட்டமிட்டு குழப்பத்தில் ஈடுபடுவதாகவும், நிகழ்வு ஆரம்பிக்க முன்னர் பேசாமல் இருந்து விட்டு இடையில் வந்து குழப்புகிறீர்கள் எனவும் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் பத்து நிமிடங்களில் நிகழ்வை நிறைவு செய்யுமாறு பொலிஸார் கூறிச் சென்றனர்.அதன் பின்னர் ஏற்கெனவே செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக நிகழ்வு இடைநடுவில் நிறைவு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வரலாற்றில் இஸ்ரேலின்..

முதல் உலகப்போருக்கு முன் நடந்த போர்களில் இங்கிலாந்து ஜெர்மன் ஆகிய நாடுகளில் யூத ராணுவப்பிரிவு இருந்தன. முதல் உலகப்போரில் இங்கிலாந்து ரஷ்யா பிரான்ஸ் ஒரு பக்கமும் ஜெர்மனி ஆஸ்திரியா இத்தாலி துருக்கி மறு பக்கமுமாக போரிட்டன.

ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சியில் முதல் உலகப்போரின் தோல்விக்கு ஜெர்மனியர்கள் தான் என்றும், ஐரோப்பாவின் வறுமைக்கும் காரணம் யூதர்கள் தான் என்று யூதர்களை வேட்டையாடினார். கிட்டத்தட்ட அறுபது லட்சம் யூதர்கள் கொல்லபட்டனர்.

ஜெர்மனி தான் வென்ற நாடுகளான பெல்ஜியம், போலந்து, பிரான்ஸ் நார்வே ஸ்வீடன் ஆகிய நாடுகளில் உள்ள யூதர்களை தேடித்தேடி கொன்றது.

## ஜெர்மனி யூதரை மடகாஸ்கரில் குடியேற்ற முயற்சி :

1940 ஜூன் மாதம் ஜெர்மானியர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். அதாவது ஐரோப்பா முழுவதிலும் உள்ள யூதர்களை அங்கிருந்து அப்படியே வெளியேற்றி, அவர்களை ஆப்பிரிக்கா அருகில் இருக்கும் மடகாஸ்கர் தீவில் குடியமற்றுவது என்பது தான் அந்தத் திட்டம்.

பிரான்ஸ் நாட்டை ஜெர்மனி கைப்பற்றிய நிலையில் பிரான்ஸ் வசம் இருந்த இந்தத் தீவை அப்படியே இந்தத் திட்டத்திற்கு பாவிப்பது என முடிவு செய்தார்கள். அடுத்து பிரிட்டனை வென்று, யூதர்களை ஐரோப்பாவில் இருந்து வெளியேற்ற பிரிட்டனிடம் உள்ள பெரிய கப்பல்களை பாவிப்பது என்றும் தீர்மானித்தார்கள்.

ஒரு வருடத்திற்கு பத்து லட்சம் யூதர்கள் என்கிற கணக்கில் நான்கு வருடங்களில் ஐரோப்பாவில் யூதர்களே இல்லாமல் பார்த்துக் கொள்வது என்பதும் அவர்களின் முழு இலக்காக இருந்தது. ஆனால் போரில் பிரிட்டனை ஜெர்மானியர்கள் வீழ்த்த முடியவில்லை என்பதால் இந்தத் திட்டத்தை கைவிட்டார்கள்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனி தோற்றது. இங்கிலாந்து பாலஸ்தீனத்தில் கொஞ்சம் கொஞ்சமாக குடியேறியிருந்த யூதர்கள் பகுதியை பிரித்து இஸ்ரேல் என்ற தனிநாடாக அறிவித்தது.

## பூங்கொத்து கொடுத்தவர்க்கு குண்டுமழை பரிசா ?

இங்கிலாந்து தான் வென்றால் துரக்கியின் கட்டுபாட்டிலிருந்து எகிப்து சிரியா ஜோர்டான் லெபனான் இராக் ஆகிய வற்றை விடுவிப்பதாகவும் இஸ்ரேலை மீண்டும் உருவாக்கி யூதர்களுக்கு தனிநாடாக அளிப்பதாகவும் அறிவித்தது. போரில் ஜெர்மனி தோற்றதால் துருக்கியிலிருந்து பல நாடுகள் சுதந்திர நாடுகளாக வெளியேறின.

இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் பாலஸ்தீனமும் சுதந்திரமடைந்தது. அப்போது இஸ்ரேல் தோன்றவில்லை. ஜெருசலேத்தை மட்டும் பிரிட்டன் தன் கையில் தக்க வைத்துக் கொண்டது.

ஐரோப்பாவில் இருந்து, இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் யூதர்களின் கப்பல் பாலஸ்தீன துறைமுகத்தை நெருங்கி போது அதில் இருந்தவர்கள் ஒரு பெரும் பதாகையை ஏந்தி வந்தார்கள் “"The Germans destroyed our families and homes - don't you destroy our hopes" அதாவது ஜெர்மானியர்கள் எங்கள் குடும்பங்களை வீடுகளை அழித்துவிட்டார்கள், நீங்கள் எங்கள் நம்பிக்கையை அழித்து விடாதீர்கள் என்றது அந்த பதாகை.

யூதர்கள் ஹிட்லரின் கொடுங்கோன்மையின் கீழ், ஹிட்லரின் ராணுவத்தின் பிடியில் சிக்கிச் சீரழிந்தது கண்டு உலகே கவலையுற்றது. ஹிட்லரைச் சாடியது, வரலாறு ஹிட்லரை ஒரு போதும் மன்னிக்காது.

யூதர்களை அங்கே சென்று இறக்கி விட்டு விட்டு மெல்ல இந்த விசயத்தில் தங்களின் கைகளை கழுவிக் கொண்டது இங்கிலாந்து. இனி இது எங்கள் பிரச்சனை இல்லை ஐ.நா. பார்த்துக் கொள்ளட்டும் என விலகிக் கொண்டார்கள்.

தற்போது பூங்கொத்து கொடுத்த பாலஸ்தீன மனிதர்களுக்கு பாஸ்பரஸ் குண்டுகளைப் பரிசாகக் கொடுக்கும் வரலாறு ஒரு போதும் மன்னிக்காது. அப்படி ஒரு பதாகையை ஏந்தி வந்தவர்கள் இன்று பாலஸ்தீனர்களின் தாயகத்தை நிர்மூலமாக்கி வருகிறார்கள்.

---

# கொக்குத்தொடுவாய்...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி மேலும் விரிவடைந்து செல்வதாக தெரியவந்ததையடுத்து அகழ்வு பணிகளைத் தற்காலிகமாக நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேற்றுடன் நிறுத்தப்பட்ட புதைகுழியின் அகழ்வுப் பணிகள் அடுத்த ஆண்டு மார்ச் முதலாம் முதல் மீண்டும் ஆரம்பமாகும் என்று முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர், சடலங்களை அகழ்ந்து எடுக்கும் பணிக்கு பொறுப்பான முல்லைத் தீவு மாவட்ட மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

புதைகுழியானது கொக்கிளாய் - முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் 1.7 மீற்றர் நீளத்துக்கு நெடுஞ்சாலையை நோக்கி விரிவடைந்துள்ளமை ஸ்கான் பரிசோதனை மூலம் தெரியவந்துள்ளது. இது தொடர்பிலேயே நேற்று கலந்துரையாடப்பட்டது.

இந்தப் புதைகுழி முற்றுமுழுதாக ஆராயப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே அனைவரும் உள்ளனர். எனவே, அடுத்த வருடம் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்கு அகழ்வு பணிகள் இடம்பெறவுள்ளன. இந்த அகழ்வு பணிகளை இலகுபடுத்தவும் ஒழுங்கு படுத்தவும் ஓர் அதிகாரி நியமிக்கப்பட வுள்ளார். இதற்கான உத்தரவை நீதிபதி அரசாங்க அதிபருக்கு வழங்கியுள்ளார். பகுப்பாய்வு டிசெம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப் படவுள்ளன என்றும் சட்ட மருத்துவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதனிடையே, இரண்டாவது கட்டமாக 9ஆவது நாளாக நேற்று தொடர்ந்த அகழ்வு பணிகள் நேற்றுடன் நிறுத்தப்பட்டன. நேற்றுவரை புதைகுழியில் 40 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பான வழக்கு விசாரணை ஒன்று எதிர்வரும் டிசெம்பர் 14ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றில் நடைபெறவுள்ளது. மேலும் அகழ்வுப் பணி மூன்று மீற்றர் அகலம், 14 மீற்றர் நீளம், 1.5 மீற்றர் ஆழத்துக்கு அகழப்பட வேண்டியிருக்கும் என்று கூறப்படுகின்றது. இந்தப் புதைகுழி தொடர்பில் இதுவரை அறிக்கை எதுவும் சமர்ப்பிக்கப்பட வில்லை. இந்நிலையில், டிசெம்பர் 31 ஆம் திகதி முதல் அறிக்கையை பேராசிரியர் ராஜ் சோம தேவ சமர்ப்பிக்க வுள்ளார்.

# இலங்கை இராணுவ...

இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல்சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தகுற்றவாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகாரசபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடைசெய்வதற்கு பிரித்தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி, பிரித்தானியாவின் ரூயிஸ்லிப், நார்த்வுட் மற்றும் பின்னர் (Ruislip> Northwood and Pinner) பகுதி பாராளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய டேவிட் சிம்மண்ட்ஸ் எம்.பி (Hon David Simmonds MP) அவர்களுடன் இராஜதந்திர சந்திப்பு ஒன்று திங்கட் கிழமை மெய்நிகர் வழியாக இடம் பெற்றுள்ளது.

சட்ட ஆலோசகரும் மனித உரிமை செயற்பாட்டாளுமான திரு கீத் குலசேகரம் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த முக்கிய சந்திப்பில், பழமைமைவாவாதக் கட்சிக்காகான தமிழர்கள் அமைமைப்பின் (British Tamil Conservatives – BTC) செயலாளர் கஜன் ராஜ் அவர்களும், இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமாக சர்வதேச மையத்தின் (ICPPG) சார்பில் றோய் ஐக்'ான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் இனப்படுகொலையின் நேரடி சாட்சியங்கள் மற்றும் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களான கங்காதரன் திலக்'ன், மோகனதர்'ன் நாகநாதன், மற்றும் ஸ்ரீபன் நாகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு, தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

கீத் குலசேகரம் அவர்கள் தனது தலைமை உரையின் போது, இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலைக்கு வரலாற்று ரீதியாக பிரித்தானியாவே பொறுப்பு என்பதை விளக்கி, தமிழ்மக்களுக்கு நீதி வழங்க வேண்டிய கடமைப்பாட்டையும் எடுத்துரைத்தார்.

ஐவுதீ மற்றும் ICPPG ஆகிய அமைப்புக்கள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு (FCDO) போதுமான ஆதாரங்களை சமர்பித்த போதும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்க தவறியிருப்பதனை சுட்டிக் காட்டினார்.

அத்துடன் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் மட்டுமன்றி, தற்போது இலங்கையில் தொடரும் ஆள்கடத்தல் மற்றும் சித்திரவதைகளும் சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுத படைகளே மேற்கொண்டு வருவதால் அதற்கும் சவேந்திர சில்வாவே பொறுப்பு என்றும், சந்திப்பில் கலந்துகொண்ட சித்திரவதைக்குள்ளானவர்கள் இதற்கு நேரடிசாட்சி என்றும் தெரிவித்தார்.

சவேந்திர சில்வா யுத்தகுற்றங்களில் ஈடுபட்டிருப்பதை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருப்பதையும், அவர்மீது ஏற்கனவே அமெரிக்கா, கனடா பயணத்தடை விதித்துள்ளதையும் எடுத்துக்காட்டிய அவர், அமெரிக்கா, கனடாவின் வழியை பின்பற்றி பிரித்தானியாவும் தடை விதிக்க வேண்டும் என்று கோரி பிரித்தானிய புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதையும் விவரித்தார்.

அடுத்து உரையாற்றிய கஜன்ராஜ் அவர்கள், இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவினை தடைசெய்வதற்கு இதுவரை 50ற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பிய கோரிக்கைகளுக்கு சரியான பதிலை குஊனுழு தராதது வருத்தத்தை தருவதுடன், தற்போதைய பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கு எதிராக தடை விதிக்க தயக்கம் காண்பிப்பது மிகவும் ஏமாற்றம் தருகிறது என்றும் இலங்கை யுத்த குற்றவாளிகளை தடைசெய்வது தொடர்பில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரான மதிப்பிற்குரிய பொப் பிளக்மன் (Hon. Bob Blackman MP) ஒரு பாராளுமன்ற உறுப்பினர் குழுவை தாங்கள் உருவாக்கியுள்ளதாகவும், அதனில் இணைந்து செயற்படும்படியும் கேட்டுக்கொண்டார்.

அனைவரின் கருத்துக்களையும் உள்வாங்கிய பாராளுமன்ற உறுப்பினர் தனது சந்தேகங்களை கேட்டு தெளிவடைந்துடன், ஈழத் தமிழர்களின் கோரிக்கையையும் ஆதங்கத்தையும், தனது பகுதியில் வாழும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தான் பிரித் தானிய அரசிற்கு எடுத்துரைப்பதாகவும், குஊனுழு இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கு காரணத்தை கேட்டு கடிதம் அனுப்புவதாகவும் வாக்களித்தார். அந்துடன் திரு. கீத் குலசேகரம் கேட்டுக்கொண்டபடி தமிழருக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழு (APPGT) மற்றும் மக்நெட்ஸ்கை தடைகளுக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்ற குழுக்களில் (APPG for Magnitsky Sanctions) இணையவும், குழுவிற்கு தமிழ்மக்கள் சார்பில் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவினை தடைசெய்யக் கோரி தன்னாலான வகையில் அழுத்தம் கொடுப்பதாகவும் வாக்களித்தார்.

---

தேசியம் பத்திரிக்கையின்
மின்னிதழை பெற
இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில்
இணைந்து கொள்ளுங்கள்..!
SCAN ME




அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |


# புலமைப்பரிசில் மாணவர்களுக்கான விசேட மாதிரி வினாத்தாள் பதிப்பு!

(அனுபவம் மிக்க ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்டது)

## எதிர்வரும் தை மாதம் முதல்....

உங்கள் தேசியம் பத்திரிகையில்
வார இதழ்களாக வெளிவரவிருக்கின்றன.

**தரம் 4 மற்றும் 5**




மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:

வார இதழ் தேசியம் THESIYAM www.thesiyamnews.com

0765673339